தமிழ்ப் பொழில்

உள்ளுறை

1. **கள்ளப் பெரம்பூரில் ஒரு பாடல் கல்வெட்டு** 1

புலவர் செ. இராசு
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

2. **தொல்காப்பியர் கால இடைநிலைகள் ஏன் கூறவில்லை** ... 6

திருமங்கலம் வை. தங்கமணி

3. **தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல்— காண்டிகை உரை** ... 13

பேராசிரியர் ச. பாலசுந்தரம்
(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

4. **பெரியகுளத்துக் கல்வெட்டில் வரலாற்று வாய்ப்புகள்** 30

புலவர் து. இராசகோபால்
(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

5. **தமிழ் இதழியத்தில் மேலைத்தாக்கம்** ... 32

டாக்டர் வீ. அரசு
விரிவுரையாளர்,
தமிழ் இலக்கியத் துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்.

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2016

துணர்: 59 குரோதன — சித்திரை மலர்: 1

ஏப்ரல் — மே 1985

'கள்ளப் பெரம்பூரில் ஒரு பாடல் கல்வெட்டு'

புலவர் செ. இராசு

கள்ளப் பெரம்பூர் தஞ்சை மாவட்டத்தில் பழமையான தோர் ஊர். அஃது ஒன்றாஞ் சேத்தி — இரண்டாஞ் சேத்தி என இன்று இரண்டு கிராமங்களாகப் பிரிந்துள்ளது.

'பாண்டி குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துப் பிரம்மதேயம் ராஜசுந்தரிச் சதுர்வேதமங்கலம்' என்றும்,[1] 'விருதராச பயங்கரச் சேரி ஆம்பலூர்' என்றும்,[2] 'பிரம்பில்' என்றும்[3] இவ்வூர் கல்வெட்டுக்களில் குறிக்கப்பெறுகின்றது.

இவ்வூரிலிருந்த வழியொன்றுக்கு 'மதுராந்தகவதி' எனப் பெயர் வழங்கப் பெற்றுள்ளது.[4] இங்கு ஓடும் வாய்க்கால் களுக்கு 'இராச நாராயண வாய்க்கால்,'[5] 'விருதராச பயங்கர வாய்க்கால்'[6] எனப் பெயர்கள் வழங்கியுள்ளன. இவ்வூரின் கீழ்ப்பகுதிக்கு 'அமண்குடி' என்பது பழம்பெயர்.[7] இங்கு வாழ்ந்த சமணர்கள் தஞ்சையை அடுத்த இடங்களில் குடியேறி விட்டனராம்.[8].

ஒரு கல்வெட்டில் ஓராண்டு வாரிய உறுப்பினராக இருந்தோர் பின்னர் இரண்டாண்டுகட்கு உறுப்பினராக இருத்தல் கூடாது என்றும், மூன்றாமாண்டு வாரிய உறுப்பினர் ஆகலாம் என்றும், அரசு அலுவல் புரிந்தோர் வாரிய உறுப்பினர் ஆகக் கூடாது என்றும் காணப்படுகிறது.[9].

மற்றொரு கல்வெட்டில் சேய்ஞலூரிலிருந்து இங்கு வந்து குடியேறிக் காணி உரிமை பெற்று ஊர்க் கணக்கெழுதி வந்த கணக்கன் ஒருவன் கிராமத் துரோகி ஆகிக் கணக்குகள் எழுதாமல் ஓடிவிட்டான். அதனால் அவன் வழியினர் கணக் கெழுத வேண்டும் என்று ஊரார் கட்டளையிட்ட செய்தி கூறப்பெறுகின்றது.[10]

இங்குள்ள 'ஸ்ரீ கயிலாசமான குலோத்துங்க சோழ ஈஸ்வர முடைய மகாதேவர்' கோயில்[11] தெற்குச் சுவரில் ஒரு பாடல் கல்வெட்டு உள்ளது. அக்கல்வெட்டு தென்னிந்தியக் கல் வெட்டுக்கள் 19 ஆம் தொகுதியில் 626 ஆம் எண்ணில் கீழ்வருமாறு அச்சிடப் பெற்றுள்ளது.

1) ஸ்வஸ்திஸ்ரீ வென்னிகழும் ராஜாக்கள் தம்பிரானென்
2) நு விளங்குமுடி கவித்தருளிய வீரராக்கதனாய்ப் பன்னு தமிழ்ப்
3) பாண்டியனை முடிந்தலைகொண் டவன்றன் பதிகொண்ட
4) சோழற்குப் பன்னிரண்டாவதின்கட் சென்னிமிசைத்
5) திரைக்கங்கை தரித்தார்க்குப் பிரம்பிற் சீகயிலாயத்த
6) ...த் திருப்படிமாற்றுக்கு மன்னுபுக ழம்பாளூர் மன்
7) ... த்தன் னாமந்தன் மல்லீசன் நிலங்கொண்டு

8) ...னிவிட்டானே

இப்பாடல் கல்வெட்டை 17—6—1984இல் தமிழ்ப் பல்கலைக் கழகக் கல்வெட்டுத்துறையினர் பார்வையிட்டுக் கடைசி மூன்று வரிகளைப் பின்வருமாறு படித்துள்ளனர்.

6) [ர்க்கு]த் திருப்படிமாற்றுக்கு மன்னுபுக ழாம்பலூர்மன்
7) [ஆதி]த்தன் மைந்தன் மல்லீசன் நிலங்கொண்டு
8) [கல்வி]னி விட்டானே

இப்பாடல் கல்வெட்டைப் பின்வருமாறு அழகிய எண்சீர் விருத்தமாக அமைக்கலாம்.

ஸ்வஸ்திஸ்ரீ

வென்னிகழும் ராஜாக்கள் தம்பிரா னென்று
விளங்குமுடி கவித்தருளி வீரராக் கதனாய்ப்
பன்னுதமிழ்ப் பாண்டியனை முடித்தலைகொண் டவன் றன்
பதிகொண்ட சோழற்குப் பன்னிரண்டா வதின்கட்
சென்னிமிசைத் திரைக்கங்கை தரித்தார்க்குப் பிரம்பிற்
சீகயிலா யத்த(ர்க்கு)த் திருப்படிமாற் றுக்கு
மன்னுபுக ழாம்பலூர்மன் (ஆதி)த்தன் மைந்தன்
மல்லீசன் நிலங்கொண்டு (கல்வி)னி விட்டானே

அடைப்புக் குறிக்குள் உள்ள எழுத்துக்கள் மைய அரசு கல்வெட்டுத் துறைப் படியில் இல்லை ; நேரில் கண்டறிந்து சேர்க்கப் பெற்றுள்ளன.

இப்பாடல் கல்வெட்டை மூன்றாம் குலோத்துங்க சோழனுக்குரியதாகப் பட்டியலிட்டவர்கள் [12] யாது காரணம் பற்றியோ இக்கல்வெட்டைப் பதிப்பித்தபோது மூன்றாம் இராசேந்திரனின் பன்னிரண்டாம் ஆட்சிக்குரியதென்று (1257—1258) பதிப்பித்துள்ளனர். [13]

மூன்றாம் இராசேந்திரன் 'இருவர் பாண்டியர் முடித்தலை கொண்டருளிய மகா இராசாதிராசன்' என்று மட்டுமே கூறப் பெறுகின்றான். [14]

ஆனால் பாண்டியர்கள் போசள மன்னன் வீர சோமேசுவரன் உதவியால் மூன்றாம் இராசேந்திரனைப் பல

முறை தோல்வியுறச் செய்துள்ளனர். ஒரு சில போரில் இராசேந்திரன் வெற்றி பெற்றிருக்கலாம். இறுதியாகத் தோல்வியடைந்தான். மதுரை செல்லுமளவு படைவலிமையும் மூன்றாம் இராசேந்திரனுக்கு இல்லை.

மூன்றாம் குலோத்துங்கனுக்கே (1178—1218) 'பாண்டியன் முடித்தலை கொண்டருளிய' சிறப்புடன், [15]

'பாண்டியன் பதிகொண்ட' பெருமையும் [16] 'இராசாக்கள் தம்பிரான்' [17] 'வீரராக்கதன்' [18] என்ற பட்டப்பெயர்களும் கல்வெட்டில் பல இடங்களில் காணப்படுகின்றன.

எனவே இப்பாடல் கல்வெட்டு பிற்காலச் சோழருள் வலியிழந்த இறுதிமன்னனான மூன்றாம் இராசேந்திரனுக்கு (1258) உரியது அல்ல. மூன்றாம் குலோத்துங்கனுக்கே (1190) உரியது என்பது உறுதிப்படுகிறது.

குறிப்புக்கள் :-

1) S. I. I. Vol XIX — 629
2) மேலது 631
3) மேலது 626
4) மேலது 628
5) மேலது 628
6) மேலது 630
7) மேலது 631
8) நேரில் விசாரித்து அறிந்தது.
9) S. I. I. Vol XIX — 627

   'நம்மூர் இவ்யாண்டு முதல் வாரியஞ்செய்யுமிடத்தில் ஓராண்டு வாரியஞ் செய்தார். இரண்டு சம்வத்சரம் விட்டு நிற்கக் கடவாராகவும் மூன்றாமாண்டு பெருங்குறி கொட்டி மகாசபைக்கு இடில் செய்யப் பெறுவாராகவும்... இராசுகுலம் பண்ணி வாரியம் செய்யக் கூடாது'

10) மேலது 629

   'நம் ஊரில் காணி உடையநாய் கணக்கெழுதி வந்த சேனுலூர் உடையான் மதளை உத்தமப் பிரியன் கிராமத் துரோகியாய் கணக்கெழுதாதொழிகையில் இவன் வங்கிஷத்தாரும் இவன் உறவு முறையென்று வந்து கணக்கெழுதுவார்களாக'

11) மேலது 628

12) மேலது பக்கம். XII

13) மேலது பக்கம். 288

14) A. R. E 93 of 1897 ; 210 of 1905 ; 420 of 1911 ; 515 of 1922 பிற்காலச் சோழர் வரலாறு பக் 455.

15) S II XIX 135, 138, 212 ; S. I. T. I Vol II 656 ; ARE 266 of 1913

16) SII III 88 ; VI 359 ; VII 797 ; XIX 630, 631.

17) ARE 80 of 1928 ; பிற்காலச் சோழர் வரலாறு பக் 419.

18) S. II. XIX 688

பிழை திருத்தம்

இதழ்	பக்கம்	பிழை	திருத்தம்
இரத்தாட்சி-மார்கழி (டிசம்பர்'84-ஜனவரி'85)	மேலட்டை 418	துணர்: 59	துணர்: 58
இரத்தாட்சி-தை (ஜனவரி-பிப்ரவரி'85)	மேலட்டை 465	துணர்: 60	துணர்: 58
இரத்தாட்சி-பங்குனி (மார்ச்-ஏப்ரல்'85)	591	(1834-1944)	(1884-1944)

பிழை பொருத்திடுக.

தொல்காப்பியர் கால இடைநிலைகள் ஏன் கூறவில்லை

திருமங்கலம் வை. தங்கமணி

படித்தார், உண்டார், கற்றார், பாடினார், நடவா நின்றார், 'நடக்கின்றார், நடக்கிறார்; படிப்பார் பாடுவார். இச் சொற்களை வினைமுற்றுகள் அல்லது தெரிநிலை வினைமுற்றுகள் என்று கூறுவோம்.

வினைமுற்றுகள்—வேற்றுமை கொள்ளாது ஆராயுங்கால் காலத்தொடு தோன்றும்[1] என்று தொல்காப்பியர் கூறுவார்.

காலத்தை மூன்று என்று[2] தொகை சொல்லி விரிப்பான் பொருட்டு இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம்[3] என்றும் கூறுவார். ஆனால் காலங் காட்டும் உறுப்புகள் எவை என்று யாண்டும் சொல்லாது விட்டுவிட்டார். ஒரு கால் கால இடைநிலைகளைச் சொல்லிய நூற்பாக்கள் சிதல்வாய்ப்பட்டுச் சிதைந்தனவா ? அன்றிப் படி எடுத்தோரால் பாழாக்கப் பட்டனவா ? ஆனால் பின்னால் வரும் சிற்சில நூற்பாக்களில் காலங்களைப்பற்றிக் காப்பியர் கூறுவதை நோக்குமிடத்து அவ்வாறு கூறுவதற்கும் இடமில்லை.

பல்கலைக் குரிசில் பவணந்தியாரோ - கருத்தாவும், கருவியும், இடமும், செயலும், காலமும் செயப்படு பொருளு மாகிய, அறுவகைப்பொருளையுந் தருவது தெரிநிலைவினைச் சொல்லாம்[4] என்று கூறி, காலத்தைத் தெளிவாகவும்-வெளிப் படையாகவும் 'த், ட், ற்' என்னும் மெய்களும், 'இன்' என்பதும் ஐம்பால் மூவிடத்தும் இறந்த காலத்தைத் தரும் வினைப் பகுபத இடைநிலைகளாம்[5] என்றும்,

---

1. வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது நினையுங்காலைக் காலமொடு தோன்றும்'' — தொல். சொல் : 198
2. ''காலந்தாமே மூன்றென மொழிப'' — தொல், சொல் : 199
3. ''இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா அம்முக் காலமுங் குறிப் பொடுங் கொள்ளும் மெய் நிலையுடைய தோன்றலாறே'' — தொல். சொல் 200
4. 'செய்பவன் கருவி நிலஞ் செயல் காலம் செய்பொருள் ஆறுந் தருவது வினையே' — நன் : 320
5. 'தடற ஒற்றின்னே ஐம்பால் மூவிடத் திறந்த காலந் தருந்தொழில் இடை நிலை ! — நன் ; 142

'ஆநின்று,' என்பதும், 'கின்று' என்பதூஉம், 'கிறு' என்பதூம் ஐம்பால் மூவிடத்தும் நிகழ்காலத்தைத் தரும் வினைப் பகுபத இடைநிலைகளாம்[6] என்றும்,

'பகர' ஒற்றும் 'வகர' ஒன்றும் ஐம்பால் மூவிடத்தும் எதிர் காலத்தைத் தரும் வினைப் பகுபத இடைநிலைகளாம் என்றும் இம்முக்காலமும் முறையே காட்டும் 'தகர' ஒற்று முதல் 'வகர' ஒற்று ஈறாய் உள்ள இடைநிலைகள் சில முற்று வினை எச்ச வினைகட்கு இலவாம்[7] என்றும் காலங்காட்டும் இடைநிலை களை விளக்கியதோடு அமையாது விகுதியுங் காலங்காட்டுவ துண்டு என்றும் கூறுவார்.

தற்கால மொழியியல் அறிஞர்கள் காலங்களை மிக நுண்மையாக எலக்ட்ரானிக் கண் கொண்டு ஒவ்வொரு காலத்தையும் பலவாகப் பகுத்துக் காட்டுவர்.

நன்னூலாரும் - அவருக்குப் பின் வந்தவர்களும் காலங் காட்டும் இடை நிலைகளைத் தெளிவாகக் காட்டும் போது — தொல்காப்பியர் மட்டும் அதனைச் சுட்டிக் காட்டாது விட்டது ஏன் ?

வேற்றுமை இயலில், பெயர்ச் சொல், காலந் தோற்றாது. ஆனால் வினைச் சொல்லோடொக்கும் ஒரு கூறான தொழில் நிலை ஒட்டு மட்டும் (வினையால் அணையும் பெயர்) காலந் தோற்றும் [8] என்பார்.

தொடர்ந்து வினையியலில் - வினைச்சொல் என்று சொல்லப்படுவது - வேற்றுமை உருபுகளை ஏற்காது. ஆராயுங் காலத்து அச்சொல் காலத்தோடு தோன்றும் [9] என்பார்.

இங்கு வேற்றுமை இயலும் - வினையியலும் கூறியதை ஒருங்கிணைத்துக் காணவேண்டும்.

---

6. 'ஆ நின்று கின்று கிறு மூவிடத்தின்
ஐம்பால் நிகழ் பொழுதறை வினை இடைநிலை!   நன்: 143
7. 'பவ்வ மூவிடத் தைம்பால் எதிர் பொழுது
இசைவினை இடை நிலையா மிவை சில இல!   நன்: 144
7. 'பெயர் நிலைக் கிளவி காலந் தோற்றா
தொழில் நிலை யொட்டும் ஒன்றலங்கடையே'
தொல், சொல்: 70
9. 'வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்
தொல், சொல்; 198

பெயர் வேற்றுமை கொள்ளும் - தொழில் நிலை ஒட்டு மட்டும் காலங்காட்டும். ஏனைய சொற்கள் காலங்காட்டா.

வினை காலங் காட்டும். ஆனால் வேற்றுமை கொள்ளாது. ஆக, வினைச் சொல் காலங் காட்டும். தொழிற் நிலை ஒட்டும் (வினையால் அணையும் பெயர்) காலங் காட்டும். வேறு சொற்கள் காலங் காட்டா, என்று காப்பியர் முடிவாகக் கூறுகிறார்.

வினைச் சொல்லும், தொழில் நிலை ஒட்டும் காலங் காட்டும் என்றால் - காலங் காட்டுகிறது என்று எவ்வாறு கண்டு கொள்வது. பவந்ணதியார் கூற்றினைப் போல இடை நிலைகளோ விகுதிகளோ நின்று காலங்களைக் காட்டுமா ?

நூல் முழுமையுந் தேடினும் பவணந்தியார் கூறியது போல் இடைநிலைகள் - அல்லது விகுதிகள் நின்று காலங்களைக் காட்டும் என்று யாண்டும் கூற்றிலர்.

தெளிவாகக் காலங்கள் மூன்று என்றவர் கால இடை நிலைகளை மட்டும் கூறாது விட்டுவிட்டார். நூல் முழுமை யும் சுமார் இருபத்தைந்துக்கு மேற்பட்ட இடங்களில் ‘காலம்’ என்றும், ‘காலக்கிளவி’ என்றும் சுட்டிச் செல்வார். ஆனால் ஓரிடத்திலேனும் காலத்தை ‘இடைநிலைகள்’ காட்டும் என்று கூறினாரில்லை.

எனின் காலங்காட்டும் உறுப்பு எது ?

‘தமிழ் மொழி வரலாறு’ என்னும் நூலில் திரு. தெ. பொ. மீ அவர்கள் :

‘வந்துவிடுவாய்’ என்ற சொல் உறுதியைக் குறிக்கும் எதிர் கால வடிவமாம். இதில் ‘விடுவாய்’ என்ற சொல் உறுதியைக் குறிக்கச் சேர்க்கப்பட்ட ‘துணை வினை’ எனலாம்‘ ‘வந்து’ என்பதில் ‘வா’ என்ற பகுதியைப் பிரித்து விட்டால் - எஞ்சி நிற்பவை காலத்தைக் காட்டமுடியாது. ஏன் என்றால் ‘வந்து’ என்ற முழுச் சொல்லே காலத்தைக் குறிக்கிறது’ என்பார்.

தொடர்ந்து ‘வருகிறேன்’ - வருகின்றேன்’ இச்சொற்கள் **நிகழ்காலமாயினும் எதிர்காலத்திற்கும் பயன்படுத்தலாம்.** எவ்வாறு

நாளை வருகிறேன்.

நாளை வருகின்றேன் எனலாம்.

சில சொற்கள் என்ன காலத்தை உணர்த்துகிறது என்பதைச் சூழ்நிலையினை வைத்தே காலத்தை உணர வேண்டும் என்றும் கூறுவார்.

காப்பியருக்குச் சங்கச் சான்றுகளையோ நன்னூலார் நூற்பாக்களையோ - இன்றைய மொழியியலார் கருத்து களையோ சான்றாகக் கூறுவது சால்புடைத்தன்று. ஏன் என்றால் அவையெல்லாம் காப்பியருக்குக் காலத்தால் பிந்தியவை பிந்தியவற்றைக் காலத்தால் முந்தியவருக்குச் சான்றாக்கல் முறையோ?

காப்பியருக்கு முந்திய இலக்கியமோ – இலக்கணமோ இன்றில்லாமையால் காப்பியர் 'காலம் மூன்று' என்று கூறியவைகளுக்கு - நன்னூலார்போல் கால இடைநிலைகள் கூறாமைக்குப் புறச்சான்று இல்லை என்றாகிவிட்டமையால் அகச் சான்று ஏதேனும் கிடைக்குமா? எனத்தேடிப் பார்த்துச் சொல்லுதலே பயனுடையதாகும்.

'பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
அவ்வயின் மூன்றும் நிகழுங் காலத்துச்
செய்யும் என்னுங் கிளவியொடு கொள்ளார்'

தொல். சொல் : 227

இதற்கு 'பல்லோர் படர்க்கைக் ஒழித்து ஒழிந்த நான்கு படர்க்கைக் கண்ணும் வரும்' என்று கல்லாடர் விளக்கம் சொல்வார்.

தெய்வச் சிலையார் 'ஈண்டு நிகழ்காலங் குறித்ததென்னை, எதிர்காலங்குறித்துக் வராதோ? எனின் எதிர்காலத்துக் கண் வருவது கால மயக்கங்கொள்க' என்பார்.

'அவள் உண்ணும்' என எதிர்காலத்தும் வருமால் எனின், அது கால மயக்கம் எனக் கொள்க' என்று கல்லாடரும் கூறுவார்.

'முந்நிலைக் காலமும் தோன்றுமியற்கை
எம்முறைச் சொல்லும் **நிகழுங்காலத்து**
மெய்ந்நிலைப் பொதுச் சொல் கிளத்தல் வேண்டும்'

தொல். சொல் : 240

இந்நூற்பாவிற்குச் சேனா வரையர்' இறந்த காலத்தையும், எதிர் காலத்தையும் அகப்படுத்து மூன்று காலத்திற்கும் பொதுவாய் நிற்கும் செய்யும்' என்னும் சொல்லால் (மலை நிற்கும்) சொல்லுக என்று கூறுவார்.

மேலே கூறப்பட்ட 'பல்லோர் படர்க்கை' எனத் தொடங்கும் நூற்பாவிற்குக் கல்லாடரும், தெய்வச் சிலை யாரும் ஒரே கருத்துடையவர்களாக நின்று 'செய்யும்' என்னும் சொல் 'நிகழ் காலத்தை' உணர்த்துவதோடு 'எதிர் காலத்தையும்' உணர்த்தும் என்றும் கூறுவார்.

'முந்நிலைக் காலமும்' எனத் தொடங்கும் நூற்பாவிற்குச் சேனாவரையர் கூறும் உரையால் செய்யும் என்னும் முற்று மூன்று காலத்தையும் அகப்படுத்தும் பொதுச் சொல்லாகவும் நின்று காலத்தை உணர்த்துகிறது என்றறியலாம்.

'செய்யும்' என்னும் சொற்குக் கூறியது போலச் 'செய்த' என்னும் எச்சம் (தொல். சொல் : 222) இறந்த காலத்திற்கு உரியது என்ற காப்பியர் (தொல். சொல் : 239 ஆம் நூற்பாவில்) 'செய்த' என்னும் எச்சம் இறந்த காலத்திற்கும், எதிர் காலத்திற்கும் உரியது என்பார்.

'பாடன்மார்' - 'காணன்மார்' என்பன போலமுடியும் 'மார்' ஈற்றுச் சொல் (தொல். சொல் : 207) எதிர்காலத்திற்கே உரியது என்றும் கூறுவார்.

மேலே கூறியவாறு போலக் காலங்களை வெளிப் படையாகக் கொள்ளாது அச்சொல் என்ன காலங் காட்டுகிறது என்பதைச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தான் கண்டறிய வேண்டும், என்பதனையும் சில நூற்பாக்கள் (தொல். சொல் : 201, 213, 214, 215, 221, 241) மூலம் சுட்டிக் காட்டிச் செல்வார்.

நன்னூலார் கூறுவது போலப் பகுபத உறுப்பாகிய இடை நிலைகள் நின்று காலங் காட்டவில்லை சொல்லின் முழு வடிவமே நின்று காலத்தை உணர்த்துகிறது என்பதற்கு ...

'காலமொடு வரூஉம் வினைச் சொல்' : தொல். சொல் : 201
'காலக் கிளவியொடு முடியும்' : தொ. சொல் : 207
'கிளவியுங் குறிப்பே காலம்' : தொல். சொல் : 214
'குறிப்பொடு வரூஉங்காலக் கிளவி' : தொல். சொல் : 215
'காலங் சுண்ணிய என்ன கிளவியும்' தொல். சொல் ; 229.

இந்நூற்பாக்களில் வரும் 'காலக் கிளவி' 'காலக்கிளவி' என்னும் தொடர்களை எண்ணிப் பார்க்கின் முழுவடிவம் பெற்ற சொற்கள் தாம் காலத்தைக் காட்டி நின்றிருக்கின்றன என்றறியலாம்.

காப்பியருக்குப் பின்னூறு ஆண்டுகளுக்கு முன்பே சொல்லின் முழுவடிவமே காலங்களை உணர்த்தியிருக்க வேண்டும் என்பதை — எச்சவியலில் 427 ஆம் நூற்பாவில் :

'இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்ற
சிறப்புடை மரபின் அம்முக்காலமும்' - என்று சுட்டிக் காட்டுவார்.

'சிறப்புடை மரபின்' என்றால் என்ன ?

நன்னூலார் ;

'எப்பொருள் எச்சொலில் எவ்வாறு உயர்ந்தோர்
செப்னர் அப்படிச் செப்புதல் மரபே, நன் : 388.
என்று கூறுவார். காப்பியரும் :

'வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே என்றும்,
தொல். பொருள் : 638,

'மாற்றருஞ் சிறப்பின் மரபு' : தொல். பொருள் : 545.
என்றும்,

'மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும்'.. தொல், பொருள் : 637 என்றும், மரபு நிலை பற்றி விளக்கி நிற்பதில் இருந்துதமக்கு முன் காலங் காட்டும் சொற்களைத் தாமியற்றிய காப்பியத்திலும் மரபு நிலை கெடாவண்ணமும், முன்னோர் கொண்ட கொள்கை சிதையா வண்ணமும், எடுத்தாண்டு இலக்கணம் செய்துள்ளார் என்று சொல்வதில் தவறில்லை எனலாம்.

தொல் காப்பியர் முக்காலத்தையுங் கூறிவிட்டுக் காலங்களைக்காட்டும் இடைநிலைகளைக் கூறாது விட்டு விட்டார் என்று கொள்வோமே யானால் ...

'காலக் கிளவி'

'நிகழ்காலத்துச்' 'செய்யும்' என்னுங் கிளவி.

'நிகழுங் காலத்து ; மெய்நிலைப் பொதுச் சொல்'

'செய்தென் எச்சத் திறந்த காலம்'

'மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
காலக்கிளவியொடு முடியும்' — என்றெல்லாம் கூறுவதற்கும் —

'சிறப்புடை மரபின் அம்முக்காலம்' என்று முன்னோர் மரபு நிலை கடைப் பிடித்து இலக்கணம் செய்துள்ளதாகக் கூறுவதற்கும் பொருளின்றி வெற்றெனத் தொடுத்தலாகி விடாதா ?

மேலே கூறிய செய்திகளை மனங் கொண்டு தொல் காப்பியர் காலங் காட்டும் இடைநிலைகளைக் கூறாமைக்குக் காரணம் : அவர் காலத்தும் சரி-முந்தியும் சரி நன்னூலார் கூறுவது போலக் காலங்காட்டும் இடைநிலைகள் இல்லை என்றும், முழு வடிவம் பெற்ற வினைச் சொற்களே — காலங் களைக் காட்டுவதோடு சில வினைச் சொற்கள் சூழ்நிலைக் கேற்றவாறு காலத்தை உணர்த்தும் என்றும், காப்பியர் காலத்திற்குப் பின்னர்த்தான் காலங்களைக் காட்டும் இடை நிலைகள் வடிவம் பெற்றிருக்க வேண்டும் என்றும், நன் னூலாரும், அவர்க்கும் பின்வந்தோரும், அதனை வடிவமைத் துக்காட்டினர் என்றும் கொள்ளலாம். ஆகையால்தான் தொல்காப்பியர் கால இடை நிலைகளைக் கூறாது—காலங் களைக் கூறுவதோடு நின்று விட்டார் எனலாம்.

துணை நின்ற நூல்கள் :-

1. தொல். சொல் : சேனா வரையம், கழகப் பதிப்பு.
2. தொல் சொல் : தெய்வச் சிலையார் உரை, கழகப் பதிப்பு.
3. தொல். சொல் : கல்லாடர் உரை, கழகப் பதிப்பு
4. தொல். பொருள் : இளம் பூரணருரை, கழகப் பதிப்பு
5. நன்னூல் சங்கர நமச் சிவாயருரை சிவஞான முனிவர் விளக்கம், கழகப் பதிப்பு.
6. மொழி நூல், தெ. பொ மீ., மக்கள் நல்வாழ்வு மன்ற வெளியீடு.

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்
கொண்ட கொழுநன் குடிவறனுற்றெனக்
கொடுத்த தந்தைக் கொழுஞ் சோறுள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கூறல் போலப்
பொழுது மறுத்துண்ணும் சிறுமதுகையளே
(நற்-110)

எனவும் வரும்.

இஃது பெருமிதத்திற்குரிய பொருளாக அமையும்.

3. இல்லது காய்தலாவது : தன் வயின் உரிமையான் எழுங் காதல் மிகுதியான் மனையறக்கிழத்தி தலைவன் தவறு புரியா வழியும் அவன்பால் தவறுகற்பித்து ஊடல் கொண்டு சினத்தல்.

எ.டு:- "வைகை வருபுனலாடத் தவிர்ந்தேன்" என்ற தலைவனை நோக்கி
ஓஒ புனலாடி னாய்எனவும் கேட்டேன் புனலாங்கே
நீள்நீர் நெறிகதுப்பு வரும் அறலாக
மாண்எழில் உண்கண் பிறழும் கயலாகக்
கார் மலர் வேய்ந்த கமழ்பூம் பரப்பகம்
நாணுந் திரையழித்து நண்பகல் வந்தவள்
யாணர்ப் புதுப்புனல் ஆடினாய் முன்மாலை
பாணன் புணையாகப் புக்கு (கலி-98)

எனத் தலைவி கூறிச் சினத்தல் கண்டு கொள்க.

கோட்டுப் பூச்சுடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று (குறள்-1313

என்பது மது.

இது வெகுளிக்குப் பொருளாக அமையும்,

14. உள்ளது உவர்த்தலாவது: தலைவன் தான் தண்ணளி செய்து உவப்பிங்குங்காலும் அவன்தன் பரத்தைமையை எண்ணித் தலைவி அவன் செயலை மாயமென மயங்கி நீக்குதல். உவர்த்தல் சுவையுறாது தவிர்த்தல்.

எ-டு:- ......வினைக்கெட்டு
வாயல்லா வெண்மை உரையாது கூறுநின்
மாயம் மருள்வாரகத்து (கலி 88)

எனவும்

........இன்று வந்து
ஆகவனமுலை அரும்பிய சுணங்கின்
மாசில் கற்பின் புதல்வன் தாயென
மாயப் பொய்ம்மொழி சாயினை பயிற்றியெம்
முதுமை எள்ளல் அஃதமைகும் தில்ல" (அகம் 6)

எனவும் வரும்.

இதுவும் வெகுளிக்குப் பொருளாக அமையும்.

5. புணர்ந்துழி உண்மைப் பொழுது மறுப்பாக்கமாவது:- தலைவன் குறித்தபருவம் இகந்து மீண்டுவந்து கூடியவழிக் கூறிச்சென்ற பருவ மாறு பாட்டினைக் கருதாது அதனையே பருவமாகக்கொண்டு தலைவி மகிழ்தல்

எ-டு:- வந்துழிக்கண்டு கொள்க.

இதனைப் "புணர்ந்துழி உண்மை" எனவும் "பொழுது மறுப்பாக்கம்" எனவும் இரண்டாகப் பிரித்து உரை கூறுவர் உரையாசிரியரும் பேராசிரியரும். புணர்ந்துழியுண்மை என்பது மெய்ப்பாட்டிற்குரியதொரு பொருளாதற்குச் சிறவாமை யானும் சொற்றொடர் அமைவு அங்ஙனம் பிரித்துக் கோடற்கு இயையாமையானும் அஃது ஆசிரியர் கருத்தாதற்கொவ்வு மாறில்லை என்க.

காணுங்கால்காணேன் தவறாய, காணாக்கால்
காணேன் தவறல்லவை (குறள்-) என்பது

இம்மெய்பாட்டுப் பொருளுக்குச் சார்பாதலை அறிந்து கொள்க. இஃது உவகைக்குப் பொருளாக அமையும்.

6. அருள்மிக உடைமையாவது: தலைவனது புறத் தொழுக்கம் முதலியவைபற்றி முனியாது அவனது தலைமைப் பாட்டினைப் போற்றி ஒழுகல்.

எ-டு:- .... எல்லா
புலப்பென்யான் என்பேன் அந்நிலையே
அவற்காணின்
கலப்பென் என்னுமிக் கையறு நெஞ்சம் (கலி-67)

எனவரும்.

இது தலைவன் மாட்டு அருள்மிக்கது.
"நாயுடைமுதுநீர்' என்னும் அகப்பாட்டினுள்
களவுடம் படுநரிற் கவிழ்ந்து நிலங்கிளையா
நாணி நின்றோள் நிலைகண்டியானும்
பேணினெனல்லனோ (அகம்-16) என்பது

பரத்தைமாட்டு அருள்மிக்கது. பிறவும் இவ்வாறு வருவன கண்டு கொள்க.

இது பெருமிதத்திற்குப் பொருளாக அமையும்.

7. அன்புதொகநிற்றலாவது: புரையறந்தெளிந்த அறிவினளாயினும் புலவி புணர்ச்சி உவகையைத் தோற்றுவித்தலின் தலைவன் மாட்டுச் செல்லும் தன்பேரன்பினைத் தலைவி அவற்குப் புலப்படாது மறைத்தல். தொகுதல்—மறைதல். இதனைப் பண்புதொக வரூஉங் கிளவி என்பது போலக் கொள்க.

எ. டு :- என்னை நீ செய்யினும் உரைத்தீவாரில் வழி
முன்னடிப் பணிந்தெம்மை உணர்த்தியவருதிமன்
நிறைதொடி நல்லவர் துணங்கையுள் தலைக்
கொள்ளக்
கரையிடைக் கிழிந்த நின் காழகம்
வந்துரையாக்கால் (கலி - 73)

எனவும்.

அணியொடு வந்தீங்கெம் புதல்வனைக் கொள்ளாதி
மணிபுரை செவ்வாய், நின்மார்பகம் நனைப்பதால்
தோய்ந்தாரை அறிகுவேன் யான் எனக்கமழும்நின்
சாந்தினாற் குறிகொண்டாள் சாய்குவள் அல்லளோ
(கலி-79)

எனவும் வரும்.

இதுவும் உவகைக்குப் பொருளாக வரும்

இதற்கு இல்லறத்தின் மேற்பெருகிய விருப்பினானே களவுக்காலத்துவிரிந்த அன்பெல்லாம் ஒருங்குகூடி நிற்றல்

என்பார் பேராசிரியர். அப்பொருள் மெய்ப்பாட்டுப் பொருளாதற்குச் சிறவாமையானும். இங்ஙனம் புலவியாற் கூறும் பொருள்பற்றி மெய்ப்பாடு தோன்றுதல் இன்றியமையாச் சிறப்பினது ஆகலானும், மேல் அருள்மிகஉடைமை எனக் கூறிப்பின்னும் அன்பு மிகஉடைமை எனல் ஒருவாற்றான் கூறியது கூறலாக அமையுமாகலானும். அஃது ஆசிரியர் கருத்தாகாமை தெரியலாம்.

8. பிரிவாற்றாமையாவது : தலைவன் தன் தலையாய கடமை பற்றிப் பிரிதலை ஆற்றியிருத்தல் முல்லை சான்ற கற்பொழுக்கத்திற்குச் சிறப்புடையதெனினும் தலைவி தன் கழிபெருங்காதல் காரணமாக ஆற்றாமை தோன்ற நிற்றல்.

எ. டு : "நெஞ்சு நடுக்குறக் கேட்டும்" என்னும்
பாலைக்கலியுள்
''நெடுமலை வெஞ்சுரம்போகி நடுநின்று
செய்பொருள் முற்றும் அளவென்றார் ஆயிழாய்
தாமிடை கொண்ட ததுவாயின் தம்மின்றி
யாமுயிர் வாழும் மதுகை இலேமாயின்
தொய்யில் துறந்தார் அவரெனத் தம்வயின்
நொய்யார் நுவலும் பழிநிற்பத் தம்மொடு
போயின்று சொல்லென் உயிர் (கலி-24)

எனவரும்.

இஃது இளிவரலுக்கும் பொருளாக அமையும்.

9. மறைந்தவை உரைத்தலாவது : சென்ற காலத்து நிகழ்ந்தவற்றை ஓர் ஏதுவைப்பற்றி எடுத்துப் பேசுதல்

எ. டு : மாக்கண் அடைய மார்பகம் பொருந்தி
முயங்கல் விடாஅல் இவையென மயங்க
யான்நோம் என்னவும் ஒல்லார்தாம்மற்று
இவை பாராட்டிய பருவமும் உளவே-இனியே
புதல்வற்றடுத்த பாலோடு தடைஇ
திதலையணிந்த தேங்கொள்மென்முலை
நறுஞ்சாந்தணிந்த கேழ்கிளரகலம்
வீங்க முயங்கல் யாம்வேண்டினமே
தீம் பால்படுதல் தாமஞ்சினரே (அகம்-26)

எனவரும்.

இதுவும் இளிவரலுக்குப் பொருளாக அமையும்.

10. புறஞ் சொல் மாணாக்கிளவியாவது : புறத்தார் கூறும் புன்சொல்லைப் பொறாது வெறுத்தலேயன்றித் தானும் புறஞ் சொல்லற்கு ஒவ்வாது நிற்றல்.

எ. டு :- இது மற்றெவனோ தோழி துனியிடை
இன்னர் என்னும் இன்னாக்கிளவி
............ஊரன்
திருபனைப் பல்கடம் பூண்ட
பெருமுது பெண்டிரேம் ஆகிய நமக்கே (குறு-181)

என்பது தோழி புறங்கூறுதலைத் தலைவி பொறாத கிளவி.

"மணி மருள் மலர" (அக-236)

என்னும் அப்பாட்டினுள்

............ஊரன்
காமம் பெருமை யறியேன் நன்றும்
உய்ந்தனென் வாழி தோழி
....
ஆதிமந்தி போல
ஏதம் சொல்லிப் பேது பெரிதுறலே' என்பது

தலைவி தான் புறங்கூறலைப் பொறாத கிளவி

இது வெகுளிக்குப் பொருளாக அமையும். பெருமிதமாதற்கும் ஒக்கும் இவற்றுள் ஏற்பனதலைவற்கும் பொருளாக வரும்.

அளிநிலை பொறாஅது (அகம்-5)

என்னும் அகப்பாட்டினுள்

தூநீர்ப்பயந்த துணையமைபிணையல்
மோயினள் உயிர்த்த காலை, மாமலர்
மணியுரு விழிந்தஅணியழி தோற்றம்
கண்டே கடிந்னம் செலவே"

என்பது தலைவன் புரையறந் தெளிதலாம்.

வங்காக் கடந்த செங்காற்பேடை
ஏழாலுற வீழ்ந்தெனக் கணவற்காணாது

குழலிசைக் குரல குறும்பல அகவும்
குன்றுறு சிறுநெறி அரிய என்னாது
மறப்பருங் காதலி ஒழிய
இறப்பல் என்பதீண்டு இளமைக்கு முடிவே
(குறு-151)

என்பது தலைவன் பிரிவாற்றாமையாம்.

"உழுந்துதலைப் பெய்த" என்னும் (அகம் 86) அகப்பாட்டினுள் தலைவன் மறைந்தவை உரைத்தல் வந்தவாறு கண்டு கொள்க.

ரு. 25. பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு
உருவு நிறுத்த காமவாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே (25)

கருத்து :- ஐந்திணை மருங்கி காமக் கூட்டமாவது, துணையமைநல்யாழ்த் துணைமையோற்றியல்பெனவும் (களவு-1) அத்துணைவராவார் ஒத்த கிழவனும் கிழத்தியுமெனவும் அவர்தாம் ஒன்றியுயர்ந்த பாலதாணையாற் காண்ப. (களவு-2) எனவும் அவருள் தலைமகன் பெருமையும் உரனுமாகிய குணங்களை யுடையான் (களவு–7) எனவும் தலைவி அச்சமும் மடனும் நாணுமாகிய குணங்களையுடையாள் (களவு-8) எனவும் கூறி அவர்தாம் இருவகைக் கைகோளானும் ஒழுகும் ஒழுக்கமே 'மன்னியவினை' என்றும் ஆசிரியர் புலப்படுத்திப் புகுமுகம் புரிதல் முதலாகக் கலக்கும் ஈறாக ஓதப்பெற்றவை களவிற்குரிய நிமித்தமாம் என்றும் முட்டுவயிற்கழறல் முதலிய எட்டும் வரைந்தெய்தும் அழிவில் கட்டத்திற்குரிய நிமித்தமாம் என்றும் தெய்வமஞ்சல் முதலிய பத்தும் கற்பிற்குரிய பொருள்களாம் என்றும் கூறி அவையும் அவைபோல்வன பிறவுமெல்லாம் எண்வகை மெய்ப்பாட்டிற்குரிய அடிப்படைப் பொருள்களாம் எனவும் இது காறும் எடுத்தோதினார் ஆசிரியர்.

அங்ஙனம் மண்ணியலினைப்பற்றி வரும் பொருள்கள் யாவும் மேற்கூறிய கிழவனும் கிழத்தியும் அத்தகைய சால்புடையராகிய வழியே நிகழுமென்பது பெறப்பட்டமையான்

அச்சால்புடைமைக்குக் காரணமாகிய அடிப்படைகள் தலைமக்கள் இருவர்க்கும் ஒருங்கு அமைதல் வேண்டுமாதலின் ஒத்த கிழவனும் கிழத்தியும் என்றார். இச்சூத்திரத்தான் அவ் ஒப்புமை இவை என விதந்து கூறுகின்றார்.

எனவே அகத்திணைக்கண் எண்முறை நிலையாய மெய்ப்பாடுகள் தோன்றுதற்கு அடிப்படைப் பொருள்கள் புகுமுகம் புரிதல் முதலாயவை என்பதும் புகுமுகம் புரிதல் முதலாய பொருள்கள் நிகழ்தற்கு அடிப்படை தலைமக்கட்குரிய குணங்கள் என்பதும் அக்குணங்கள் அமைதற்குரிய அடிப்படை பிறப்பு முதலாய ஒப்புமைகள் என்பதும் பெறப்படும்.

அவற்றுள் குணங்கள் தலைமக்கட்குரிய இலக்கணமாக நிற்றலின் அவற்றைக் களவியலுள் விதந்து கூறி இருவர்க்கும் ஒருங்கொத்து அமைய வேண்டிய ஒப்பினது வகையை ஈண்டுக் கூறுகின்றார் என்க.

பிறப்பு முதலாய இப்பத்தும் தலைமக்கட்குரிய இலக்கண மன்மையான் ஆண்டுக் கூறாமல் மெய்ப்பாட்டுப் பொருள் தோன்றுதற்குக் காரணமாதல் பற்றி ஈண்டு அமைத்தார் என்க.

பொருள்: பிறப்பு முதல் திருஈறாகக் கூறிய இப்பத்தும் களவியலுள் ஒத்த கிழவனும் கிழத்தியும் எனக் கூறிய ஒப்பினது வகைகளாம்.

"முறையுறக் கிளந்த" என்றது களவியலுள் "ஒன்றியுயர்ந்த பாலதாணையின் ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப மிக்கோனாயினும் கடிவரையின்றே" என்றதையாம்.

ஈற்றேகாரம் இசைநிறை. ஏனைய ஏகாரமும் ஓடுவும் எண்ணுக்குறித்து நின்றன. வகை-கூறுபாடு.

1. பிறப்பாவது : குலப்பிறப்பு, அஃதாவது ஒழுக்க நிலையான் அமைந்த அந்தணர் முதலிய நாற்குலம் "நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக் குலத்தின்கண் ஐயப்படும்" என்பதனான் ஒழுக்கம் குலம்பற்றி விளங்குதல் புலனாகும்.

எ. டு :- அவனுந்தான்

ஏனல் இதணத்தகிற் புகையுண்டியங்கும்
வானூர் மதியம் வரைசேரின் அவ்வுரைத்

தேனின் இறாலென ஏணி இழைத்திருக்கும்
கானக நாடன் மகன் ... (கலி-39)

இதன்கண் அவனும் என்ற உம்மையான் அவளும் கானநாடன் மகள் என்பதுபோதரும்.

2. குடிமையாவது : பண்பாடு. அஃதாவது குலனுடையார்க்குரியவை எனச் சான்றோர் வகுத்துக் கொண்ட சால்பு.

குலம், குடிமை என்பன ஒரோ வழி ஒத்தபொருளினவாய் வரும் எனினும் இரண்டற்கும் வேறுபாடு உண்டு என்பதை இலக்கண வகையான் உணர்த்தற்பொருட்டுக் குலத்தைப் பிறப்பென்று சிறப்பித்தோதினார் என அறிக. குல ஒழுக்கம் செயற் பண்பையும் குடிமை என்பது குணப்பண்பையும் குறித்து வருமெனக் கொள்க.

மெய்ப்பாட்டிற்குரிய பொருளாக ஓதப்பெற்ற பொருள் யாவும் பண்பும் செயலுமே ஆதலின் அவற்றிற்கு அடிப்படையாய குடிமையையும் பிறப்பையும் ஒப்பினது வகையுள் தலைமையுடையவை என்பது தோன்ற முதற்கண் வைத்தோதினார் என்க.

எ-டு:- நின்ற சொல்லர் நீடு தோறினியர்
என்றும் என்றோள் பிரிபறியலரே
தாமரைத் தண்டாதூதி மீமிசைச்
சாந்திற்றொடுத்த தீந்தேன் போல
புரைய மன்ற புரையோர் கேண்மை
நீரின்றமையா உலகம் போலத்
தாமின்றமையா நந்நயத்தருளி
நறுநுதல் பசத்தல் அஞ்சிச்
சிறுமையுறுபவோ செய்பறியலரே (நற்-1)

எனவரும்

இதன்கண் நின்ற சொல்லர் என்பதனான் தலைவனது பண்பும் (குடிமை) தம் மின்றமையாநம் என்பதனான் தலைவியது பண்பும் விளங்குதலைக் கண்டு கொள்க.

3. ஆண்மையாவது : ஆளுமைத்திறன், ஆண்தன்மை வேறு ஆளுதல்தன்மைவேறு. இதன் முதநிலை உரிச்சொல் "ஆள்". அதன் முதனிலை உரிச்சொல் 'ஆண்' என்று அறிக,

இயற்றலும் ஈட்டலும் தலைவற்கு ஆளுமை. காத்தலும் வகுத்தலும் தலைவிக்கு ஆளுமை. பிறவற்றையும் இவ்வாறே பகுத்துணர்ந்து கொள்க.

எ-டு:- அரிதாய அறனெய்தி அருளியோர்க்களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியும் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயின் பிரிந்த நங்காதலர்
வருவர் கொல்வயங்கிழாய் வலிப்பல் யான்

(கலி-11)

இதன்கண் அளித்தலும் தெறுதலும் புணர்ச்சியும் தருமெனப் பொருள்வயிற்பிரிந்தான் தலைவன் என்பதும், தலைவி வலிப்பல்யான், என்பதும் இருவர் ஆளுமை ஒப்புமையைப் புலப்படுத்தி நின்றவாறு கண்டு கொள்க.

4. ஆண்டாவது அகவை. அஃது ஈண்டுப்பருவத்தை ஆகுபெயரிலக் கணத்தான் உணர்த்தி நின்றது.

அஃதாவது தலைவற்குப் பதினாறு ஆண்டும் தலைவிக்குப் பன்னிரண்டாண்டும் நிரம்பி நிற்கும் வரைவிற்குரிய பருவமாம். இங்ஙனம் தலைவன் அகவையிற் காற்கூறுகுறைதல் ஒப்புமை யகவை (ஆண்டு) என்றுணர்க.

'இதனை "மிக்கோனாயினும் கடிவரையின்றே" எனக் களவியலுள் கூறியுணர்த்தியமை கண்டு கொள்க.

எ. டு :- குன்றக் குறவன் காதன்மடமகள்
வண்டுபடு கூந்தல்தண்மழைக் கொடிச்சி
வளையள் முளைவாலெயிற்றள்
இளையளாயினும் ஆரணங்கினளே (ஐங்-256)

இதன்கண் வளையல்-எயிற்றள் என்பவற்றான் தலைவீ பருவமும் ஆரணங்கினள் என்று கூறியதனான் தான் அணங்கப் பட்டமை புலப்படுத்தினாகலின் தலைவன் பருவமும் ஒத்துள்ளமை புலப்படும்.

5. உருவாவது: வனப்பு அஃதாவது தோற்றமும் எழிலும் ஏற்றமுற விளங்கும் நிலை

எ. டு :- பைஞ்சுனைப் பூத்த பகுவாய்க் குவளையும்
அஞ்சல் லோதி அனநடைக் கொடிச்சி

கண்போல்மலர்தலும் அரிதவள்
தன்போற் சாயல் மஞ்ஞைக்கும் அரிதே
(ஐங்-299)

இதன்கண் தலைவியின் கண்மலர்ச்சி கூறியதனால் தலைவன் எழிலுடைமையும் விளங்கும்.

6. நிறுத்த காமவாயிலாவது: நிலைபேறுடைய காம ஒழுக்கத்தற்குரிய உள்ளக்கிளர்ச்சி

எ. டு.:- ஒடுங்கீரோதி ஒண்ணுதற் குறுமகள்
நறுந்தண்ணீரள் ஆரணங்கினளே
இனையளென்றவட்டினையள அறியேன்
சிலமெல்லியவே கிளவி
அணைமெல்லியல்யான் முயங்குங்காலே (குறு-70)

நறுந்தண்ணீரள் என்பதனால் தலைவனது உள்ளக்கிளர்ச்சியும் சிலமெல்லியவே கிளவி என்பதனால் தலைவியின் உள்ளக் கிளர்ச்சியும் ஒருங்கொத்தமைந்தமை கண்டு கொள்க.'

அன்பு எனப் பொருள் கூறுவார் பேராசிரியர் அஃது யாவர்க்கும் வேண்டும் பொதுக்குணமாகலின் ஈண்டைக்குச் சிறவாமையறிக :

7. நிறையாவது சால்பு. அடக்கமெனினும் ஒக்கும். அஃதாவது மறைபிறரறியாமல் நெஞ்சினை நிறுத்துதல்.

எ டு :- யாயாகியளே மாஅயோளே
மடைமாண் செப்பின் தமிய வைகிய
பொய்யாப் பூவின் மெய்சாயினளே
பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்
இனமீனிருங் கழி ஓதம் மல்குதொறும்
கயமூழ்குமகளிர் கண்ணின்மானும்
தண்ணந்துறைவன் கொடுமை
நம்முன் நாணிக்கரப்பாடும்மே (குறு - 9)

இது தலைமகள் நிறை.

வல்லார்ரை வழிபட்டொன்றிரந்தான் போல
நல்லார்கட்டோன்றும் அடக்கமுமுடையன் (கலி.47)

என்பது தலைமகன் நிறை.

8. அருளாவது ஒருவர் ஒருவரின் குறையினை நிறையாக ஏற்றொழுகும் மனமாட்சி. அருளுடைமை என்னும் பொதுக் குணம் ஈண்டுச் சிறப்புப் பொருள் படநின்றது.

பொறைவேறு குறையை நிறையாகக் கொள்ளும் பண்பு வேறென அறிக.

எ. டு :- ...... நெஞ்சே உறழ்ந்திவனைப்
பொய்ப்பவிடோம் என நெருங்கின் தப்பினேன்
என்றடி சேர்தலுமுண்டு (கலி - 88)

இது தலைவி தலைவன் பரத்தைமையுணர்ந்தும் "புறஞ் சாய்ந்துக் காண்டைப்பாய் நெஞ்சே" என்பதனால் அதனை நிறையாகக் கொண்டு அருவினமை கண்டு கொள்க.

வேம்பின்பைங்காய் என் தோழிதரினே
தேம்பூங் கட்டி என்றனிர் (குறு 1- 96)

என்பது தலைவன் தலைவியின் குறையை நிறையாகக் கொண்ட மனமாட்சி.

9. உணர்வாவது ஒருவர் ஒருவர் தம் உள்ளக் குறிப்பை அறித்தொழுகும் நுண்ணறிவு.

எ. டு :- கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்
சொற்கள் என்னபயனுமில

என்பதனாற் கண்டு கொள்க.

10. திருவாவது தெய்வத்தன்மை.அஃதாவது கண்டாராற் போற்றப்பெறும் பொலிவு-திருத்தகவிற்றாயதோர் உள்ள நிகழ்ச்சி என அவர் கொள்கைக்கேற்பப் பொருள் கூறுவார் பேராசிரியர். அஃது ஒப்புமைப் பண்பாகக் கோடற்கு ஏலாமையறிக.

எ.டு:- அருஞ்சுடர்நீள் வாண்முகத்து ஆயிழையும், மாறிலா
வெஞ்சுடர்நீள் வேலானும் போதரக்கண்டஞ்சி
ஒருசுடரு மின்றி உலகு பாழாக
இருசுடரும் போந்தவென்றார் (திணைமாலை-71)

இதன்கண் தலைவியையும் தலைவனையும் தெய்வத்தன்மை புலப்படக்கண்டோர் கூறி மகிழ்ந்த வாறறிந்து கொள்க.

இனி அடியோர் பாங்கிலும் வினைவலர் பாங்கிலும் இழிசினர் கண்ணும் ஈண்டுக் கூறப்பெற்ற ஒப்புமைகள் ஒருங்கு நேராமையால் அவர்தம் காம ஒழுக்கம் அகனைந்திணைக் குரித்தாகாது பெருந்திணையின் பாற்பட்டு அடங்குமென அறிக.

சூ. 26 : நிம்பிரி கொடுமை வியப்பொடு புறமொழி
வன்சொல் பொச்சாப்பு மடிமையொடு குடிமை
இன்புறல் ஏழைமை மறப்போ டொப்புமை
என்றிவை இன்மை என்மனார் புலவர் (26)

கருத்து : உலகியலால் பல்வேறிடங்களில் பல்வேறு மக்களிடத்து அரிதும் பெரிதுமாக நிகழும் ஒழுகலாறுகளைத் தொகுத்து நான்மறைப் பயன்கருதி நல்லிசைப் புலவோரான் செய்யப்படும் செய்யுள் வழக்கிற்கு ஏற்பன கொண்டு ஏலாதனவற்றை நீக்கி நூலோரான் அமைக்கப்பெற்ற நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்காகிய அகத்திணைக்கண் சுட்டி ஒருவர் பெயர் பற்றாமல் எஞ்ஞான்றும் ஒரு நிலையினராக அமைத்து ஓதப்பெறும் தலைமக்கட்கு உரியவாக வரையப்பெற்ற புதுமுகம்புரிதல் முதலாய பொருள்கள் யாவும் மக்களின்பால் ஆங்காங்கே நிகழ்வனவேயாகும். ஆதலின் அவற்றிற்கு அடிப்படையாகக் கூறப்பெற்ற பிறப்பு முதலாய சால்புகளேயன்றிச் சாலாதபிற குணங்களும் செயல்களும் மக்கள் பால் அமைத்து கிடத்தல் இயற்கையாதலின் அவை பற்றியும் மெய்ப்பாடுகள் தோன்றுமன்றே? அவ்வழிச் சாலாதபண்பும் செயலுமாயவற்றுள் ஒருசார் பொருள்கள் அகனைத்திணைக்குரிய தலைமக்கட்கு ஒவ்வாமையான் நல்லிசைப் புலவோர் செய்யுள் யாக்குமிடத்து அவற்றைத் தவிர்த்தல் வேண்டுமென்பாராய் ஆசிரியர் இச்சூத்தரத்தான் இன்னவை இன்மை வேண்டுமென விதிக்கின்றார்.

பொருள்: நிம்பிரி முதலாக ஒப்புமையீறாகக் கூறப்பெற்ற பத்துப் பொருளும் மெய்ப்பாட்டுப் பொருளாதற்கு இன்மை வேண்டும் எனக் கூறுவர் புலவர்.

1. நிம்பிரியாவது நேயமின்மை. அஃதாவது வெறுப்பு. இச்சொல் நேம்-பிரி (நேம்-நசை. பிரி – பிரிதல் – நீங்குதல்) என்னும் இரு உரியடிகளான் அமைந்ததொரு திரிசொல் லாகும்.

இதற்குப் பொறாமை அஃதாவது பொறுத்தலின்மை எனப்பொருள் கொள்வர் உரையாசிரியன்மார். இளம்பூரணர் வெறுப்பு என்னும் பொருளே கொண்டனர்.

இஃது ஒன்றனைச் சிறப்பிக்குங் குறிப்பொடு கூறுதற்கண் வருவதற்கும் ஏற்கும் எனப் பொருளியலுள் ஆசிரியர்

சினனே பேதைமை நிம்பிரி நல்குரவு
அனை நால் வகையும் சிறப் பொடுவருமே
(பொரு-51)

எனக் கூறியுள்ளமையான் அறிக.

2. கொடுமையாவது : இரக்கமின்மை, அஃதாவது சொல் லானும் செயலானும் உயிர் நடுங்கும் வகைதுன்பு சூழ்தல்.

3. வியப்பாவது ; தமது வனப்பும் வளமும் சிறந்தவை யாகக் கருதித் தம்மைத் தாமே புகழ்ந்து கொண்டொழுகுதல். வியத்தல் - புகழ்தல் இதனைப்

பெரியோரை வியத்தலுமிலாமே
சிறியோரை இகழ்தல் அதனினுமிலமே (புறம்-)

என்பதனானறிக.

4. புறமொழியாவது தமது உள்ளத்தும் இல்லத்தும் நிகழ் வனவற்றைப் புறத்தார்க்குப் புலனாமாறு பேசுதல் இதுகுல னுடையார்க்கு ஒவ்வாத செயலாகலின் விலக்கப்பட்டது.

இதற்குப் புறங்கூறுதல் எனப்பொருள் காண்பார். அஃது எல்லோர்க்கும் பொதுவாக விலக்கப்பட்டுள்ள குணமாதலின் காதலர்க்குச் சிறந்துரிமையாகாமை உணர்க.

5. வன்சொல்லாவது : குடிமைக் கொவ்வாத கடுஞ் சொற்களைக் கிளத்தல். அஃது அன்பினைத் தேய்க்கும் அரமாதலின் விலக்கப்பட்டது.

இன்சொல் வாய்ச்சொல் என்பவை தலைமகற்கும், மென்மொழி, சின்மொழி, பணிமொழி கனிமொழி, தேமொழி என்பவை தலைமகட்கும் உரியவாகச் சான்றோர் ஓதுதலையறிக. இவற்றிற்கு மாறுபட்டது வன்சொல் என்க.

6. பொச்சாப்பாவது : காதற்காமச் சிறப்பிற்குரிய, சொற்-செயல்கலின்பால்கடைப்பிடியின்றி நெகிழ்ந்து விடுதல். இது நிறுத்த காமவாயிற்கு ஊறு செய்வதாகலின் விலக்கப்பட்டது. பொச்சாப்பு எனினும் மறவி எனினும் ஒக்கும்.

7. மடிமையாவது:கடப்பாடவானவற்றைக் காலத்தொடு புரியாமல் சோம்பியிருத்தல. இது காமச் செறிவிற்கு ஒவ்வாமையான் விலக்கப்பட்டது.

8. குடிமையின்புறலாவது : தத்தம் குடிமைச் சிறப்பினை உயர்வாக எண்ணிச் செருக்கிக் களித்தல். இது மற்றவர் குடிமையை இகழும் குறிப்பாக அமைதலின் காதலுணர்வைச் சிதைக்கும் என விலக்கப்பட்டது.
இதனை இரண்டாக எண்ணுவர் பேராசிரியர். இரண்டாயின் இரண்டும் வேண்டப்படும் பொருளாதலன்றி விலக்கப்பாட்டிற்கு ஒவ்வாமையறிக, இன்புறல் என்பதற்கு அவர் கூறும் பொருள் உடற்கூறுபற்றியதன்றிக் குணம் பற்றியதாகாமையும் ஓர்ந்து கொள்க.

9. ஏழைமைமறப்பாவது : பணிவுடைமையை மறந்தொழுகுதல் ஈண்டுப்பணிவென்பது அன்பிற் றெளியராதல். மதிக்கத்தக்கார் மாட்டும் மேலாளர் மாட்டும் தம்மை அடியேன், ஏழையேன் சிறியேன் எனப் பண்புடையோர் கூறிக் கொண்டொழுகும் வழக்கினைக் கண்டு கொள்க.

ஏழைமையை மறந்தவழி உள்ளத்தே தலைமைச் செருக்கு மீதூருமாகலின் அது காதற்கேண்மைக்கு ஒவ்வாமையான் விலக்கப்பட்டதென்க.

மற்று இதனைத் தலைவிக்கே உரியதாகக் கொண்டு ஏழைமைஅறிவின்மை அஃதாவது பேதைமை மறப்பு எனப் பொருள் கோடலுமாம்.

இதனையும் இரண்டாகக் கொள்வர் பேராசிரியர். மறப்பு மறவி என்பார் அது பொச்சாப்பு எனமேல் விலக்கப்பட்டமையான் கூறியது கூறலாதல்காண்க.

10. ஒப்புமையாவது : ஒருவரை ஒருவர் வடிவானும் வனப்பானும் பிறரொடு ஒப்பிட்டு நோக்குதல், அஃதாவது இன்னாளை ஒப்பாள் இவள் எனத்தலைவனும் இன்னானை ஒப்பான் இவன்எனத்தலைவியும் கருதுதலாம். அந்நோக்கு அறக்கற்பிற்கு ஒவ்வாத பண்பாகலின் விலக்கப்பட்டது.

நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்தும் நீர்
யாருள்ளி நோக்கினீர் என்று (குறள் - 1320)

எனத் தலைவியின் இல்லது காய்தல் பற்றி வரும் கூற்றில் இப்பொருள் வந்தவாறு கண்டுகொள்க.

இவை இன்மைவேண்டுமென்றதனான் அகனைந்திணை பற்றிய நல்லிசைப் புலவோர் செய்யுட்கண் உதாரணம் காணல் கூடாமை தெரிக.

இனி இவை சுட்டி ஒருவர் பெயர் கூறி 'உள்ளோன் தலைவனாக இல்லது புணர்த்துச் செய்யப்படும் தொடர் நிலைச் செய்யுட்கண் ஓரோவிடத்து வருமாறும் உலக வழக்கின் கண் ஆங்காங்கே நிகழுமாறும் நோக்கி இவற்றைத் தெரிந்து கொள்க,

சூ. 27 : கண்ணினும் செவியினும் நுண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங்குரைத்தே (27)

கருத்து : மேற்கூறிய மெய்ப்பாட்டிற்குரிய பொருள்களையும் அவற்றான் தோன்றும் எண்வகை மெய்ப் பாட்டினையும் திரிபின்றி அறிந்து கோடற்குரிய கருவி கூறுமுகத்தான் இவ்வியலுக்காவதொரு புறனடை கூறுகின்றது.

பொருள்: (மன்பதையுள் உயர்திணையாய மக்களிடத்தும், பிறவு முளவே அக்கிளைப் பிறப்பே (மரபியல்) எனப்பெற்ற உயிர்களிடத்தும் பல்வேற நிலைகளில் நிகழும் நிகழ்ச்சிகளையும் குறிப்பானும் வெளிப் படையானும், மக்களிடத்து நிகழும் உரையாடல் களையும் முறையே கண்ணானும் செவியானும் தம் நுண்மாண் நுழைபுலத்தான் ஓர்ந்து திரிபின்றி உணரும் அறிவுடையார்க்கன்றி ஆராயுமிடத்து அவ் வுணர்வில்லா மாந்தர்க்கு மேற்கூறிய நன்னயம்

சான்ற மெய்ப்பாட்டுப் பொருள்களையும் அவைப் பற்றி எழும் மெய்ப்பாடுகளையும் எண்ணி அறிந்து கோடல் அரிதாகும்.

என்றது பண்ணைத் தோன்றிய பொருள்பற்றி நிகழும் நாடகச்சுவையினை உணரும் கருவிகளும் அறிவுமே செய்யுளுறுப்பாகிய மெய்பாட்டினை உணர்ந்து கோடற்கும் மூலமாம் என்றவாறு.

நாடகக் காட்சியின்கண் ஒரு பொருநன் வெளிப்படுத்தும் சத்துவம் (விறல்) அவன் மெய்வாயிலாகவும் உரைவாயிலாகவும் வெளிப்படுதலான் அதனைக் காண்போன் அச்சுவையைத் தன் கண்ணானும் செவியானும் கண்டும் கேட்டும் எய்துவானன்றே அங்ஙனம் காட்சிவகையான் உணர்ந்து எய்தும் அவ்வறிவே செய்யுளுறுப்பாகிய மெய்ப்பாட்டினை உணர்ந்து கோடற்கும் கருவியாம் என்பதை விளக்குதற் பொருட்டுக் "கண்ணினும் செவியினும் நுண்ணிதின் உணரும் உணர்வு" என்றார்.

என்னை ? செய்யுட்கண்வரும் நிகழ்ச்சிகள் அகவிழிக்கும் அகச்செவிக்கும் புலனாகி நிற்றலின் என்க. பிற விளக்கங்கள் முன்னுறையிற் கூறப்பெற்றன.

எ. டு :- செறாஅச் சிறு சொல்லும் செற்றார்போல் நோக்கும்
உறாஅர்போன்றுற்றார் குறிப்பு (குறள் - 1097)

என்னும் தலைவன் தலைவியின் செறுத்த நோக்கினூடே அன்புண்மையைக் கண்ணானும் சிறு சொல்லின் கண் காதலுண்மையைச் செவியானும் தன் நுண்ணுணர்வான் திண்ணிதின் அறிந்தமையான் இங்ஙனம் கூறுவானாயினமை தெரியலாம். தலைவன் காணும் காட்சியும் அவன் உணர்வும் இச்செய்யுளைப் பயில்வார் தம் அகவிழிக்குப் புலனாதலையும் அறியலாம்.

இது நாடகக் காட்சியாயின் தலைவியிடமாகத்தோன்றும் சுவை பெருமிதமாம். இது தலைவன் கூற்றாகலின் அவன்கண் தோன்றும் சுவை உவகையாம். இதனை இலக்கியக் காட்சியாக அறியுமிடத்துத் தலைவியைக் கருதுமிடத்து இல்வலியுறுத்தல் என்னும் பொருள் பற்றி வந்த பெருமிதம் என்னும் மெய்ப்பாடாம். தலைவனைக் கருதுமிடத்து புலன் என்னும் பொருள்பற்றி வந்த உவகை என்னும் மெய்ப்பாடாம்.

இனி இச்செய்யுட்குத் "தலைவருபொருண்மையான் முடிக்கப்படும் மெய்ப்பாடு யாது என நோக்குமிடத்து நன்னயப் பொருளைத் தலைவன் கூற்றாகப் புலவர் யாத்துள்ளமையான் தலைவனுடைய சுவைவழித்தோன்றும் மெய்ப்பாடாகிய உவகையே இதற்குரிய மெய்ப்பாடாதல் தெளியலாம்.

எனவே, இச்செய்யுளின் மெயப்பாடாகிய உறுப்பு புலன் என்னும் பொருள் பற்றி வந்த உவகை என்பதாம்.

பிறவற்றையும் இவ்வாறே நாடகச் சுவையொடு ஒப்பிட்டு ஓர்ந்துணர்ந்து கொள்க.

மெய்ப்பாட்டியல் உரை முற்றும்

கடிகாரமாம் கடிகாரம்

நேரத்தை மட்டும் காட்டிய கடிகாரங்கள், நாள், தேதி, விநாடி, கதிரவனின் உதயம், மறைவு முதலியவற்றையும் காட்டத் தொடங்கியதை நாம் கண்கூடாகக் கண்டிருக்கிறோம். 'மைக்ரோபிராசசர்' என்கிற தொழில்நுட்ப வளர்ச்சி, நமது கடிகாரத்துக்கு இன்னும் பல வேலைகளைச் செய்யக் கற்றுக் கொடுந்திருக்கின்றது. பேசும் கடிகாரம், விளையாடும் கடிகாரம், நெஞ்சத் துடிப்பைக் காட்டும் கடிகாரம், நெடும் பயணம் செல்வோருக்கு விட்டில் நடப்பதைத் தெரிவிக்கும் கணிப்பொறிக்கடிகாரம் என இப்போது பலவகைக் கடிகாரங் களை அமெரிக்க, ஜப்பான் நிறுவனங்கள் போட்டியிட்டுத் தயாரித்து வருகின்றன. நெஞ்சத் துடிப்பைக் காட்டும் கடிகாரத்தின் விலை 1200 ரூபாய் என்றால், பேசும் கடிகாரத் தின் விலை ரூ. 720 தான். கடிகாரத்தின் பலவகைப்பட்ட வளர்ச்சி அறிவியலின் அற்புத வளர்ச்சிக்குச் சான்றாகத் திகழ்கின்றது.

"நன்றி : அறிவியல் பண்ணை, தமிழ்ப் பல்கலைக் கழகம்"

பெரியகுளத்துக் கல்வெட்டில் வரலாற்று வார்ப்புகள்

புலவர் து. இராசகோபால்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இலச்சினை :

இராசேந்திர சோழீச்சுரம் - கோயில் மேல்விதானத்தில் கயல்சின்னம். (இதைப்போல் இவ்வூர் அருள்மிகு வரதராசப் பெருமாள் கோயில் சுவரிலும், கிருட்டிணன் கோயில் தெருவி லிருக்கும் கிருட்டிணன் கோயில் வெளிக் கல்லிலும் இச்சின்னங்கள் காணப்படுகின்றன).

இராயர்கோபுரம் :

ஒருவன் முடியாத காரியத்தில் முயன்றால், அவனது செய்கை ராயர் கோபுரத்திற்கு அடிப்போட்டாற் போல் என்ற பழமொழியை அப்படியே நினைவூட்டுகிறது.

செய்திகள் வெட்டப்பட்டது :

கல்லிலும் / செப்பிலும்

மொழி :

தமிழ் / கிரந்தம்

ஊருணி :

பெருமாள் ஊருணி

குளம்/வாய்க்கால் :

செட்டிக்குளம்
படைவல்லவன் வாய்க்கால்

சாட்சிக் கையொப்பமிட்டவர்கள் :

அழகப்பெருமாளான சொக்கன் ஆண்டமை அழகியானென
துவாரபதி வேளான்
துவாரபதி பிரமாதிராஜன்

பெருவழி *

ஆதனூர்

* பகர்ந்துலகு சீர்போற்றும் பழைய வளம் பதியான இவ்வூர்ப் பெருவழி எது எனத் தெரியவில்லை

மலை :

திருமலை

சிறப்புச் செய்தி

வைய நீடுக ! மாமழை மன்னுக
மெய்வி ருப்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே !

இப்பாடல் பெரியபுராணப் பிரதிகள் பலவற்றில் காணப்படவில்லை.

முடிப்புரை :-

பெரியகுளத்துக் கல்வெட்டுகளில், பல்வேறு இடங்களில் பதிவு செய்யப்பட்ட இவ்வரலாற்றுச் சிதறல்கள் ஆராய்ச்சி செய்யும் ஆர்வலர்களுக்குப் பெரிதும் கைகொடுக்கும்

அடிக்குறிப்பு

A. R. E	No	409	of	1907
A. R. E	No	410	of	1907
A. R. E	No	411	of	1907
A. R. E	No	412	of	1907
A. R. E	No	413	of	1907
A. R. E	No	414	of	1907
A. R. E	No	415	of	1907
A. R. E	No	419	of	1907
A. R. E	No	416	of	1907

நேரில் வாசித்தறிந்தது.

கடவுச் சீட்டு

இலங்கை அரசின் பாஸ்போர்ட்டுகளில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய 3 மொழிகளும் இடம் பெற்றுள்ளன. தமிழில் ‘கடவுச் சீட்டு’, எனப் பாஸ்போர்ட்டைக் குறிக்கின்றனர்.

“நன்றி ! அறிவியல் பண்ணை, தமிழ்ப் பல்கலைக் கழகம்”

தமிழ் இதழியத்தில் மேலைத் தாக்கம்

டாக்டர் வீ. அரசு

தமிழ் உரைநடை ஐரோப்பியர் வரவால் வளர்ந்து வடிவம் பெற்றது. உரைநடை வடிவங்களில் ஒன்றான (Reportage prose) இதழியலும் ஐரோப்பியர் வரவால் தமிழ் பெற்ற செல்வங்களில் ஒன்றாகும்.

இந்தியாவில் 1674-இல் பம்பாயிலுல், 1772-இல் சென்னையிலும், 1779-இல் கல்கத்தாவிலும் கிழக்கிந்தியக் கம்பெனிகளின் முயற்சியால் அச்சகங்கள் (press) ஏற்படுத்தப்பட்டன. இவைகளே இந்திய இதழியல் வளர்ச்சிக்குக் கால்கோள்களாக அமைந்தன. இந்தப் பின்னணியில் ஆங்கில மொழயில் இந்தியாவில் இதழ்கள் வெளிவரத் தொடங்கின. தொடக்க காலத்தில் ஐரோப்பியரின் கம்பெனிகள் தங்களது விளம்பரத்திற்காகவும், தமக்குள் தொடர்பு கொள்வதற்காகவும் ஆங்கிலத்தில் இதழ்களை நடத்தத்தொடங்கின. இவ்விதம் நடத்தப்பட்ட ஆங்கில இதழ்களே பின்னர் இந்திய மொழிகளில் செய்திப் பத்திரிக்கைகள் (News Magazine) உருவாக வழிகண்டன.

மேலும் ஐரோப்பியப் பண்பாடு, கிறித்தவ மதம் ஆகியவற்றைக் காலனி நாடுக்ளில் பரப்பும் நோக்கத்துடன் செய்தி இதழ்கள் நடத்தியதோடு பருவ இதழ்களையும் (priodicals) நடந்தினர்.

செய்தி இதழ்கள் (News Magazine) பருவ இதழ்கள் (priodicals) என்ற இதழியலின் இவ்விரு பிரிவுகளில் தமிழில் வளரத்தொடங்கிய இதழியல் துறை முழு அளவில் இந்தியாவில் உருவான ஆங்கில இதழியலை அடிப்படையாசக் கொண்டே வளரத்தொடங்கியது.

கல்கத்தாவில் 1776 இல் வில்லியம் போல்ட்ஸ் (William Bolts) என்பவர் இந்தியாவில் முதன்முதல் ஓர் ஆங்கில இதழைத் தொடங்கினார். கம்பெனி நிர்வாகங்களை விமரிசனம் செய்து இவர் நடத்திய இதழ் வெற்றிகரமாகச் செயல்பட இயலாத நிலை ஏற்பட்டது. இவர் அவரது நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்பட்டார். 1780 - இல் ஜேம்ஸ் அகஸ்டஸ் இக்கி (James Augustess Hicky) என்பவர் தொடங்கிய Bengal Gazatte or Calcutta General Adviser என்ற செய்திப் பத்திரிக்கைதான் இந்தியாவின் முதல் செய்திப்

பத்திரிக்கை என்று கூறப்படுகின்றது. இவரை இந்திய இதழியலின் தந்தை என்றும் அழைக்கின்றனர்.[1] இந்த இதழில் கம்பெனி நிர்வாகத்தின் செயற்பாடுகள், அது பொது மக்களுக்கு ஏற்படுத்தும் விளைவுகள் ஆகியன குறித்து செய்திகள் வெளியிட்டனர். உண்மையான இந்திய இதழியல் (True Journalism) தோன்றுவதற்கு இந்தச் செய்திப் பத்திரிக்கையே வழி கண்டது.

1785 - இல் சென்னையில் Madras Courier என்ற பத்திரிக்கை ரிச்சர்டு ஜான்சன் (Richard Johnsan) என்பவரால் தொடங்கப்பட்டது. இவர் ஐரோப்பியக் கம்பெனிகளின் உதவியுடன், அச்சு எழுத்துக்கள் அச்சு எந்திரம் ஆகியவற்றைப் பெற்றுச் செய்தி இதழை நடத்தினார்.

இவ்வகையில் இந்தியா முழுவதும் ஆங்கில மொழியில், ஆங்கிலேயர்களால் செய்திப் பத்திரிக்கைகள் நடத்தப் பட்டன, வட்டார இதழில் (Vernacular Journalism) குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு வளரவில்லை. வட்டாரச் செய்திகளும் ஆங்கில இதழ்களில்தான் வெளிவந்தன. இந்தப் பின்னணியில் தமிழில் செய்தி இதழ்களும் பருவ இதழ்களும் வெளிவரத் தொடங்கின.

இந்திய மொழிகளில் தமிழில்தான் முதன்முதல் அச்சிடுதல் நடைபெற்றது. 1554இல் லிஸ்பன் நகரத்தில் முதல் தமிழ் நூல் அச்சிடப்பட்டது. 1557இல் கோவாவிலும், 1558இல் கொல்லத்திலும் முதன்முறையாகவும், பின்னர் 1578இல் இரண்டாம் முறையாகவும் தமிழ் எழுத்துக்கள் அச்சு வடிவம் பெற்றன.[2] இவை கிறித்தவ மதப் பிரச்சாரச் சிறுபிரசுரங்கள் ஆகும். இவ்விதம் அச்சுப்பணி தொடங்கினும் அவை விரைவாக வளரவில்லை.

1831இல் Tamil Magazine என்ற பத்திரிக்கையின் தொடக்கமே தமிழ் இதழியல் தொடக்கமாகும். சென்னையில் இருந்த சமயப் பிரச்சாரக் கழகம் (Relegions Tract Society) இவ்விதழை நடத்தியது. இவ்விதழை ஒரு சமயப் பிரச்சார சாதனமாகவே கருத வேண்டும்; செய்திகளை வெளியிடும் உண்மையான இதழியத்தின் தொடக்கம் என்று கூற இயலாது.

உண்மையான இதழியம் என்பது இந்திய விடுதலைப் போரின் மூலம்தான் வளரத் தொடங்கியது. இந்திய விடுதலைப் போர் தொடர்பாக ஆங்கிலத்தில் வரும் செய்திகளைத் தமிழில்

வெளியிட முதன்முதல் முயன்றவர் ஜி. சுப்பிரமணிய அய்யர். இவர் 1882இல் 'சுதேசமித்திரனை'த் தொடங்கினார். இதுவே தமிழ்ச்செய்தி இதழியத்தின் தொடக்கம் ஆகும்.[3] இதனைத் தொடர்ந்து தமிழில் பல செய்தி இதழ்கள் வெளி வரத் தொடங்கின.

இவ்வகையில் இந்திய விடுதலைப் போர் மக்கள் இயக்க மாக வளர்ச்சியடையும் கால கட்டம் வரை (1920-வரை) தமிழில் செய்திப் பத்திரிக்கைகள் முறைப்படுத்தப் படாமலும், குறிப்பிட்ட காலவரையறைகளுக்குள் வராமலும், கிறித்தவ மதபோதனை, இந்து மதப்பிரச்சாரம் என்ற நோக்கங்களுக் காகவே வந்துகொண்டிருந்தன.

செய்தி இதழ்களைப் போன்று பருவ இதழ்களும் குறிப்பிட்ட முறையில் வெளிவரவில்லை. 1831 இல் தொடங்கிய 'தமிழ்ப் பத்திரிக்கை (Tamil Magazine) முதல் பல்வேறு இதழ்கள் வெளிவரத் தொடங்கின.[5]

இவ்விதம் வளர்ந்த தமிழ் இதழியம் (1831-1940) அதன் முதல் சகாப்தத்தில் பெற்ற ஐரோப்பியத் தாக்கங்கள், மேற்குறித்த சமூக வரலாற்றுப் பின்னணியோடு இரண்டறக் கலந்து இருந்தன. ஐரோப்பிய இதழியம் அல்லது ஆங்கில இதழியம் இன்றித் தமிழ் இதழியம் இல்லை என்ற நிலை இருந்தது. வேறு சொற்களில் சொன்னால் ஆங்கில இதழி யத்தின் தமிழ் வடிவமே, தமிழ் இதழியம் எனலாம். இந் நிலையைப் பின்கண்ட செய்திகள் மேலும் உறுதிப்படுத்து கின்றன.

1. இதழியம் தொடர்பான தொழில் முறைகள் (Technical aspects) ஆங்கில இதழியத்தை அப்படியே பின் பற்றின.

2. இதழில் பேசப்படும் செய்திகள் ஆங்கில இதழ் முறையை அடிப்படையாகக் கொண்டிருந்தன.

3. இதழ் வடிவம் ஆங்கில இதழிய அடிப்படையில்தான் அமைக்கப்பட்டது.

4. ஆங்கிலமொழி பயன்படுத்தப்பெற்ற முறை.

5. ஆங்கிலச் செய்திகளை மொழிபெயர்ப்பாகப் பயன் படுத்தியநிலை போன்ற பலவற்றை குறிப்பிட முடியும்.

ஆங்கில இதழ்கள் அச்சிடப்படுவதற்கான அச்சுத்தொழில் முறை தமிழ் இதழ்கள் அச்சிடப்படுவதில் பின்பற்றப்பட்டது. மை (Ink), காகிதம், தட்டச்சு (Type writer), அச்சு எந்திரங்கள் (Printing Machine) பல்வகை அச்சு எழுத்துக்கள் (Types), உருவம் பதிக்கும் கருவிகள் (Printing Blocks) போன்ற பல தொழில் தொடர்பானவைகளைப் பயன் படுத்துவதில் ஆங்கில முறைகள் அப்படியே பின்பற்றப்பட்டன. நமக்கெனத் தனியான முறைகள் உருவாகவில்லை.

பிழைதிருத்துதல் பணிக்கு ஆங்கிலக் குறியீடுகளே பின் பற்றப்பட்டன. இன்றும் இம்முறை கைக்கொள்ளப் படுவதைக் காணமுடிகிறது. எனவே தமிழ் இதழியலின் அடிப்படையான அச்சுத்தொழில் உத்திகள் அப்படியே கடன் பெற்றவை ஆகும்.

ஆங்கில இதழ்கள் தொடக்க காலம் முதல் இந்தியாவை ஆட்சிபுரிந்த ஆங்கிலேயர்கள் குறித்த செய்திகளையே மிகுதியாக வெளியிட்டன. காலப்போக்கில் இந்திய விடுதலைப் போர் தொடர்பான செய்திகளும் வெளிவந்தன. தமிழ் இதழ்களிலும் மேற்குறித்த செய்திகளின் தமிழ் வடிவமே பிரசுரிக்கப்பட்டன.

''பிரிட்டீஷ் பாராளுமன்றத்திலே நடக்கும் அரசியல் வாக்குவாதப் போரிலே கண்ணும் கருத்தும் செலுத்திவந்த பிரிட்டீஷ் பத்திரிக்கைகளைப் போல, தற்கால இந்தியப் பத்திரிக்கைகள் அரசியல் செய்திகளிலே மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றன[5]'' என்ற செய்தி மேற்குறித்த கருத்தினை உறுதிப் படுத்தும்.

ஆங்கில இதழியத்தில் விளம்பரங்கள் மிகக் குறிப்பிட்ட இடத்தைத் தொடக்க காலம் முதல் பெற்று வருகின்றன. தயாரிப்புப் பொருட்கள் (Product Advertisements) பற்றிய விளம்பரங்கள் தயாரிப்பு நிறுவனங்கள் பற்றிய விளம்பரங்கள் (Industrial Advertisement). வணிக விளம்பரங்கள் (Commericial Advertisements) பொது விளம்பரங்கள் (General Advertisements), பகுக்கப்பட்ட விளம்பரங்கள் (Classified Advertisements), போன்ற பலவகை விளம்பரங்களைத் தொடக்க காலம் முதல் ஆங்கில இதழ்களில் காணமுடியும். தமிழ் இதழ்களில் மேற்குறித்த விளம்பரங்களில் அதே முறையில், அவை வெளியிடும் வடிவத்தில் வெளியிடுவதைக் காண முடிகின்றது.

ஆங்கில இதழ்களில் கார்ட்டூன் வெளியிடுதல் ஒரு மரபாக இருந்தது. இதனைத் தமிழில் பாரதியார் தமது 'இந்திய' இதழில் பின்பற்றியதை அறிய முடிகின்றது. இவரைத் தொடர்ந்து ஆங்கில இதழ்களைப் பின்பற்றித் தமிழ் இதழ்கள் அரசியல் மற்றும் சமூகப் பொருளாதாரம் தொடர்பான கார்ட்டூன் படங்களை வெளியிடுவதைக் காணமுடிகிறது.

இவ்வகையில் தமிழ் இதழியல் அடிப்படையில் ஆங்கில இதழ்கள் வெளியிடும் செய்திகளையே தம் முன்மாதிரியாகக் கொண்டன என்பதை அறிய முடிகின்றது.

தமிழ்ச்செய்திகள், வடிவத்தில் ஆங்கில இதழ்களையே பின்பற்றின. தலையங்கம், செய்தி அமைப்பு, பக்க அமைப்பு போன்றவற்றில் மேற்குறித்த செய்தி உறுதியாகிறது. ஆங்கில இதழ்களில் எம்முறையில், எப்பக்கங்களில் தலையங்கள் எழுதப்பட்டனவோ அதேமுறை பின்பற்றப்பட்டது. ஆங்கில இதழ்களில் முதன்மைத் தலையங்கம் (Main leader) துணைத் தலையங்கம் (Sub leader) ஆகியவை எழுதப்பட்டன. இதனைச் சுதேசமித்திரன், திராவிடன், தேசபக்தன், உதயதாரகை போன்ற தமிழ் இதழ்களும் பின்பற்றியதைக் காண முடிகின்றது.

செய்தி அமைப்பு என்பது, தலைப்பு, துணைத்தலைப்புகள், நாள், இடம், காட்டும் வரி, (Date line), செய்திச் சுருக்கம் (Lead), செய்தி விளக்கம் (Body) என்னும் பிரிவுகளைக் கொண்டதாகும். இம்முறைகளை - ஆங்கில இதழ்முறைகளைத்-தமிழ் இதழ்கள் அப்படியே பின்பற்றுகின்றன.

செய்தியின் அளவு, எழுத்துவகை, விதவிதமான தலைப்புகள், துணுக்குகள், கருத்துப் படங்கள், செய்திகளோடு தொடர்புடைய படங்கள்,பெட்டிச் செய்திகள் ஆகியவை பக்க அமைப்பு எனப்படும்.ஆங்கில இதழ்கள் தொடக்க காலம் முதல் இம்முறையைப் பின்பற்றி வருகின்றன. தமிழ் இதழ்களும் இதே முறையைப் பின்பற்றி வருகின்றன. எனவே இதழ்களின் வடிவமைப்பு என்பதில் ஐரோப்பிய இதழியில் தாக்கம் மிகவும் வெளிப்படையான ஒன்றாகும்.

ஆங்கிலமொழி தமிழ்இதழியலில் குறிப்பிடத்தக்க ஆதிக்கம் செலுத்தியதைக் காணமுடிகின்றது. ஆங்கிலத்தில் செய்தி இதழ்களின் தலைப்புக்களே எழுதப்பட்டதை அறிய முடிகிறது. 'Tamil Magazine' என்றே முதல் தமிழ்ப் பத்திரிக்கையின் பெயர்

ஆங்கிலத்தில் எழுதப்பட்டதை அறியமுடிகிறது. 1848 இல் வெளிவந்த 'நற்போதகம்' என்ற இதழ் 'Friendly Instrustor' என்ற தலைப்பில்தான் வெளிவந்தது. 1893-இல் வெளிவந்த சட்டப்பத்திரிக்கை ஒன்றின் தலைப்பு Monthly Law Journal (in Tamil) என்பதாகும். மேலும் ஆங்கிலச் சொல் தமிழ் எழுத்தில் எழுதப்பட்ட தலைப்புக்களுடனும் பத்திரிக்கைகள் வெளிவந்தன. 1835-இல் வெளிவத்த 'மெட்ராஸ் கிரானிகல்' இவ்வகைக்கு எடுத்துக்காட்டு ஆகும்.

இதழ்களின் தலைப்பு, உள் தலைப்பு, ஆகியவை ஆங்கிலத்தில் அல்லது ஆங்கிலச் சொற்கள் தமிழ் எழுத்துக்களில் எழுதப்படுவது பரவலாகக் காணப்பட்டது. The Vizagapatnam Conference and the Policy of Boycott."

"விசாகப்பட்டணம் கான்பரன்ஸூம்
பஹிஷ்கார முறைமையும்"

என்பது பாரதியார் நடத்திய இந்தியா (8 –6 –1907) இதழின் செய்தித் தலைப்பு ஆகும்[7]. மேலும் இதழின் துணைத் தலைப்புகள் ஆங்கிலத்திலும் அதன் மொழிபெயர்ப்புத் தமிழிலுமாக இதழ்களில் நடைமுறையில் இருந்ததைக் காண முடிகின்றது.

"Guide To the Tamil Calander
காலக் கணித விளக்கம்"

என்பது எல். வேதநாயகம் பிள்ளை என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'Friendly Instructor' (1848) இதழில் காணப்படும் துணைத் தலைப்பு ஆகும்[8]

மேலும் செய்திகளில் ஆங்கிலச் சொற்கள் தமிழ் எழுத்துக்களால் எழுதப்பட்டதையும் காண முடிகின்றது.

"ஹிஸ் எக்ஸெலென்ஸி கவர்னர் யுவர்
மெஜஸ்டிஸ் ஒபீடியண்டு செர்வண்டு"

என்ற வார்த்தையெல்லாம் சுதேசமித்திரனில் பிரசுரிக்கப்படுகின்றன. சுதேசமித்திரன் அறிவைப் பரப்புகிறதா? அல்லது ஆங்கில பாஷையைப் பரப்புகிறதா?"

என்பது சுப்ரமணிய சிவா கூற்று ஆகும்.[9]

மேற்குறித்த செய்திகள், ஆங்கில மொழி தமிழ் இதழியலில் பெற்ற இடத்தைக் காட்டும். மேலும் ஆங்கில இதழ்களிலிருந்து செய்திகள் அப்படியே பெறப்பட்டதால், ஆங்கிலத் தொடர் ஆக்கங்கள் தமிழிலே கையாளப்பட்டன.

'You are requested என்ற செய்தி நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்' என்று எழுதப்பட்டதைக் காண முடிகிறது. மேலும் 'Water fall' என்ற ஆங்கிலச் சொல் 'நீர்வீழ்ச்சி' என்றே எழுதப்பட்டது. அதன் சரியான தமிழ்ச் சொல் **அருவி** என்பதே ஆகும்.[10]

மேலும் பத்திரிக்கைத் தொடர்பான கலைச் சொற்கள் ஏறக்குறைய 75 விழுக்காடு ஆங்கில இதழியல் கலைச் சொற்களில் இருந்தே உருவாக்கப்பட்டுள்ளன. இதனை,

"சுமார் 3000 புதிய சொற்கள் வணிகம், அரசியல், நிர்வாகம் மற்றும் தொழில் நுணுக்கச் சொற்களாக இதழியத்தின் மூலம் தமிழுக்குக் கிடைத்தது[11] என்னும் கூற்று உறுதிப் படுத்துகின்றது.

எனவே. தமிழ் இதழியலின் மொழி நடையில் ஆங்கில மொழியின் ஆதிக்கம் மிகவும் குறிப்பிடத்தக்க அளவில் இருந்ததைக் காணமுடியும்.

ஆங்கிலத்தில் வரும் செய்திகளை ஆங்கிலம் அறியாத மக்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே, தாம் தமிழில் செய்திப் பத்திரிக்கை நடத்துவதாகச் சுதேச மித்திரனைத் தோற்றுவித்த ஜி. சுப்பிரமணிய அய்யர் கூறுகின்றார்.[12] இந்தப் பின்னணியில் தமிழ் இதழியல் என்பது ஆங்கிலப் பத்திரிக்கைச் செய்திகளையே அடிப்படையாகக் கொண்டு வளர்ந்தது. ஏறக்குறைய அனைத்துப் பத்திரிக்கைச் செய்திகளும் ஆங்கிலச் செய்தி மொழிபெயர்ப்பாகவே அமைந்தன.

"சீமை (Westrn Countries) பம்பாய், பூனா, அலகாபாத் இவ்விடங்களில் ஆங்கிலேய பாஷையில் தேர்ந்த மேதாவிகளால் பிரசுரிக்கப்படும் பத்திரிக்கைகள் எல்லாவற்றையும் ஒருவர் வாசித்தால் எவ்வளவு சமாசாரம் அறிவாரோ அவ்வளவு சங்கதிகளையும் இந்த 'லோகோபகாரி'யைப் படிப்பதால் தெரிந்து கொள்ளலாம்[13] என்பதின் மூலம் ஆங்கில இதழ்ச்

செய்திகள் தமிழ் இதழ்களில் இடம்பெற்றதை 1896 இல் வெளிவந்த லோகோபகாரி செய்தி வழி அறிந்து கொள்ள முடிகிறது.

இந்தச் செய்திகளின் அடிப்படையில் தொடக்ககால பெரும் பகுதியான செய்தி இதழ்களும், குறிப்பிடத்தக்க பருவ இதழ்களும் ஐரோப்பியத்தாக்கத்திற்கு உட்பட்டதை அறிய முடிகின்றது. செய்தி இதழ்களில் ஏற்பட்ட ஐரோப்பியத் தாக்கத்திற்கும், பருவ இதழ்களில் ஏற்பட்ட தாக்கத்திற்கும் குறிப்பிடத்தக்க சில செய்திகளைக் குறிப்பிட முடியும்.

பருவ இதழ்களே மதப்பரப்புப் பிரச்சாரம், இலக்கிய உருவாக்கம், அறிவியல் செய்திகளைத் தமிழுக்குத்தருதல் போன்ற பல்வேறு பணிகளைத் திட்டமிட்டுச் செய்தன. ஆனால் செய்தி இதழ்களில் நடைமுறை நிகழ்வுகளே மிகுதியாக இடம்பெற்றன. முதல் சகாப்தம் (1831-1930) பருவ இதழ் களில் ஏற்பட்ட ஐரோப்பியத் தாக்கங்களைப் பின்கண்ட வகையில் தெளிவுபடுத்த முடியும்.

ஆங்கிலம் கற்று அரசுப் பணிகளில் இடம்பெற்ற ஒரு புதிய வர்க்கம், இந்தியச் சமூக அமைப்பில் உருவானதே, தமிழில் பருவ இதழியல் வளருவதற்கான அடிப்படைக் காரணம் ஆகும். செய்தி இதழ்கள் விடுதலைப் போரை முன்னிருத்திய அளவு இவை செயல்படவில்லை என்பதையும் இங்கு நினைவிற் கொள்ள வேண்டும். இவ்வகையில் உருவான - புதிய வர்க்கத் தினர், ஆங்கிலத்தில் கண்ட இலக்கிய வளங்களைத் தமிழருக்கு அறிமுகப் படுத்த வேண்டும் என்று விரும்பினர். மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளை வ. வெ. சு. அய்யர் போன்ற வர்கள் இவ்வகைக் கருத்தோட்டப் பின்னணியில் தமிழில் படைப்பிலக்கியங்களை உருவாக்கினர். இவ்விதம் படைப் பிலக்கியங்கள் உருவாக வழிகண்டவை பருவ இதழ்களே யாகும். இவ்வகையில் வெளிவந்த பல்வேறு இதழ்களில், அக்காலத்தில் வெளிவந்த பல புதினங்கள் ஆங்கில மொழியில் எழுதப்பட்ட புதினங்களைத் தழுவித் தமிழில் எழுதப்பட்டன. இவை அனைத்தும் தமிழின் பருவ இதழ்களில் வெளிவந்தன.[14]

ஐரோப்பிய இலக்கியத்தில் சிதைந்த புனைவியல் (Decadent Romanticism) 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்டது எனலாம். இந்தப் போக்கினைப் பின்பற்றித் தமிழில் துப்பறியும் கதைகளை இருபதாம் நூற்றாண்டின்

தொடக்கத்தில் பலர் எழுதினர். அவர்களுள் ஜே. ஆர். ரெங்கராஜு (1906), ஆரணி குப்புசாமி முதலியார் (1911) போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுடைய படைப்புக்கள் அனைத்தும் அன்றைய பருவ இதழ்களில்தான் வெளிவந்தன. இதன் மூலம் ஐரோப்பிய இலக்கியத் தாக்கத்திற்கு இதழியல் வழி அமைத்துக் கொடுத்திருப்பதைக் காண முடிகின்றது.

ஆங்கிலமொழி இலக்கியங்களையும் பிறவற்றையும் மொழி பெயர்த்துத் தமிழ்ப்பருவ இதழ்களில் வெளியிட்டதையும் காண முடிகின்றது.

இந்துரேகா என்னும் மலையாள நாவலின் தமிழாக்கம், குமாரசம்பவம் என்னும் வடமொழிக் காவியத்கின் தமிழாக்கம், ஷேக்ஸ்பியரின் நீலிவசீகரம்(Taming and Shrew) அமலாதித்தின் (Hamlet), வெரோனா நகரத்து இரு கனவான்கள் (Two Gentlemen of Verona) என்னும் நாடகங்களின் தமிழாக்கம் ஆகியவை 1908-இல் வெளிவந்த விவேகபோனி[15] இதழில் வெளியிடப்பட்டன.

மறைமலையடிகள் தாம் நடத்திய இதழில் J.E M. Reynalds என்பவரின் கதைகளைத் தழுவி நாவல்களை எழுதியுள்ளார். இவ்வகையில் தமிழ் நவீன இலக்கிய உருவாக்கத்தில் தொடக்ககால இதழியில் பணி குறிப்பிடத்தக்கது. மேலை இதழ்களில் வெளியான பல்வேறு இலக்கியங்களை மொழி பெயர்த்து வெளியிட்டதின் மூலம் பருவ இதழ்களில் மேலைத் தாக்கம் குறிப்பிடத்தக்க அளவில் இருப்பதைக் காணமுடிகின்றது.

தமிழ் இதழியலின் முதல் சகாப்தம் (1831-1930) தமிழ் மயப்படுதல் (Nativization) என்ற தன்மையில் குறைந்து இருந்த நிலையில் மேலைத்தாக்கம் என்பது பல்வேறு நிலைகளில் நேரடியாகவே நடைபெற்றது. ஆனால் தமிழ் இதழியலின் இரண்டாவது சகாப்தம் (1930-1980) தன்மயப்படுதலில் குறிப்பிடத்தக்க அளவில் ஏற்பட்டுள்ளது என்று கூறமுடியும்.

இந்தக் கால கட்டத்தில் இந்திய விடுதலைப் போர் மிக விரிந்த தளத்தைப் பெற்றது. மேலும் உலக அளவில் பெரும் நெருக்கடி ஏற்பட்டது. இதனால் இந்திய சமூகப் பொருளாதார அமைப்பிலும் பெரும் மாற்றங்கள் உருவாகத் தொடங்கின. குறிப்பாகப் படித்தோர் எண்ணிக்கை

அதிகமாகியது. முதலாளித்துவப் பொருளாதார அமைப்பின் அடித்தளங்கள் உருவாகத் தொடங்கின. அனைத்து நிலைகளிலும் சந்தைப் பொருளாதாரம் (Market econnomy) உருவாகத் தொடங்கியது. அனைத்துப் பொருட்களையும் விற்பனை செய்து இலாபம் தேடும் தன்மைகள் வளர்ச்சி பெற்றன. இந்தப் பின்னணியில் மேலைத்தாக்கங்களும் இந்திய அளவில் ஏற்படத் தொடங்கின. இதழியலும் இந்நிலைக்கு முரண்பட்டதன்று.

செய்தி இதழ்களில் அமெரிக்க முறையை நேரடியாகப் பின்பற்ற, அமெரிக்கா சென்று அம்முறைகளைக் கற்று வந்தார் சி. பா. ஆதித்தனார். இம்முறையை அடிப்படையாகக் கொண்டு 'தந்தி' (1942) என்ற இதழைத் தொடங்கினார். இவர் மேலை இதழியலை நடத்துவோர் பெற்றிருக்கும் கையேடு (Style Book) போன்று தமிழ் இதழியலுக்குக் கையேடு உருவாக்கினார். இதன் மூலம் மேலைத் தன்மைகளைத் தமிழ் மயப்படுத்தும் முயற்சியைக் காண முடிகின்றது.

மேலும் மேலை உலகச் செய்திகளைத்தமிழ் இதழியலுக்குத் தரும் செய்தி நிறுவனங்கள் முழுமையாக வடிவம் பெறத் தொடங்கின. இவை உலகம் தழுவிய செய்திகளை உடனுக்குடன் இதழ்களுக்குக் கொடுக்கும் நிலையால், தமிழ் இதழியில் மிக வேகமாக வளரும் வாய்ப்பு ஏற்பட்டது.

சி. பா. ஆதித்தனார் தொடங்கிய "தந்தி" பின்னர் 'தினத்தந்தி'யாக வடிவம் பெற்றது. இவ்வகைப் பத்திரிக்கைத் தொழில் 1950 களின் இறுதியில் பெரும் கம்பெனிகளாகவும் வடிவம்பெறத் தொடங்கின. சங்கிலித் தொடர், (Chains), குழு (Group) பன்மடங்கு (Multiple Unit) என்று கூறத்தக்க வகையில் செய்தி இதழ்களை நடத்தும் நிறுவனங்கள் உருவாயின.

இக்குறிப்பிட்ட செய்தி நிறுவனங்கள் நடத்தும் செய்தி இதழ்களில் ஐரோப்பிய அமெரிக்கத்தாக்கம் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது ஆகும். பாமர மக்களை எளிதில் சென்றடையும் உணர்ச்சித் தொடர்பான, பரபரப்பான செய்திகளை வெளியிட்டு, அதன்மூலம் விற்பனையைப் பெருக்கும் அமெரிக்க இதழியத்தை "மஞ்சள் இதழியம்" (yellow Journalism) என்பர். இங்குத் தினத்தந்தி தொடங்கி நடத்தப் பெறும் பல்வேறு செய்தி இதழ்களும்[17] இதே முறையைப் பின்பற்றுகின்றன. இதன் மூலம் விற்பனையைப் பெருக்கும்

நோக்கத்தில் வெற்றி பெறுகின்றன. இவை பாலியல் தொடர்பான செய்திகள், கொலை, கொள்ளை முதலிய மக்களை எளிதில் கவரும் செய்திகளைப் பிரசுரிக்கின்றன. இங்குப் போட்டிச் சந்தைப் பொருளாதாரம் என்பதே முதன்மையாக உள்ளது. இம்முறை அமெரிக்கா போன்ற நாடுகளில் நடைமுறையில் உள்ளது. இதனை நேரடியாக இவை பின்பற்றுகின்றன.

செய்தி இதழ்களில் மேற்குறித்த பாங்கில் வெளியாகும் இதழ்கள், குறிப்பாகச் சென்னையில் மிகுதியாகும். இந் நிலைக்கு மாறுபட்ட நிலையில் தமிழ் இதழியல் தன்மை களுடன் நடத்தப்பெறும் இதழ்கள் மிகவுங் குறைவு. வெளிப் படுத்தும் செய்திகள் அடிப்படையில் மேற்குறித்த தாக்கங் களைப் பெற்றுள்ள இதழ்களில் வடிவ அமைப்பில் முன்னர் குறிப்பிட்டுள்ள தன்மைகளின் வளர்ச்சி நிலையான தாக்கங் களைக் காணலாம்.

இந்தக் கால கட்டத்தில் (1936 - 1980) பருவ இதழ்களில் மேலைத் தாக்கங்கள் என்பன, இருகூறுகளில் நிலவின. மேலை மஞ்சள் இதழியல் போக்கை அடிப்படையாகக் கொண்டு குமுதம் போன்ற இதழ்கள் [18] 1940 களில் உருவாகத் தொடங்கின. இவை புதிய அலை (New Wave) என்ற மேலைத் தாக்கத்தை நேரடியாகப் பின்பற்றுகின்றன. இவை ஆங்கிலம் போன்ற மொழிகள் வெளியாகும் பாணியில் துணுக்குகள், கதைகள் ஆகியவற்றை மொழிபெயர்த்தும் பிரசுரிக்கின்றன. அல்லது அத்தன்மைகளுடன் எழுதப்படும் கதைகளை வெளி யிடுகின்றன. இவ்வகைப் பத்திரிக்கைகளுள் ஒன்றான ஆனந்த விகடனை உருவாக்கிய திரு வாசன் இங்கிலாந்தி லிருந்துபலஇதழ்களை வரவழைத்தார்.அவை மாதஇதழ்களான Strand Windsor, Chamber's Magazine ஆகியவைகளும், வார இதழ்களான 'Punch' Humarist Passingshow, Titbits ஆகியவை களும் ஆகும். [18] ஆங்கில இதழ்களில் நகைச்சுவை மிளிரும் சிறு கதைகளும், சுருக்கமான கட்டுரைகளும், கேலிச் சித்திரங் களும் வெளிவந்தன. அரசியல் கட்டுரைகளை அவை வெளியிட வில்லை. தலையங்கமும் கிடையாது. ஆனால் அப்பொழுது அதன் ஆசிரியராக இருந்த கல்கி அரசியலே மூச்சாக கொண்டி ருந்ததால், தலையங்கத்தை வைத்துக் கொண்டு, மீதி எல்லா வற்றிலும் ஆங்கில முறையையே பின்பற்றினார். குறிப்பாக ஆனந்த விகடன் 'punch' இதழின் கிண்டல், வேடிக்கை, விமரிசனம் ஆகியவற்றை அப்படியே கைக்கொண்டது. "இதன்

பயனாக 'punch', ஆனந்த விகடன் இரண்டையும் படித்த தமிழர்கள், ஆனந்த விகடனுக்கு 'The Punch of South India' என்று பட்டம் சூட்டினர்" [19]

இவ்வகையில் இந்தக்கால கட்டத்தில் வெளிவந்த, வெளிவந்து கொண்டிருக்கும் - அனைத்துப் பருவ இதழ்களும், தன்மயப்படுத்தப் பட்டது போன்ற பிரமையை (Illusionary nativization) உருவாக்கினும், அடிப்படையில் மேலைத் தாக்கங்களைக் கொண்டே நடைபெறுகின்றன என்று கூற இயலும்.

பருவ இதழ்களில், சிரத்தையுடன் (Serious) வெளிவந்த இதழ்களும் வெளிவரும் இதழ்களும் மிகுதி. இவை ஒரு வகையில் தொடக்ககாலத்தில் நடத்தப்பெற்ற இலக்கியப் பத்திரிக்கைகள் போன்றன என்று கூறமுடியும். [20] இவைகளைச் சிறு பத்திரிக்கைகள் என்று அழைப்பர். தமிழில் உண்மையான படைப்பிலக்கியங்கள் இவ்வகை இதழ்கள் மூலம்தான் உருவாகின எனலாம். தமிழ் இதழியலின் இரண்டாம் சகாப்தத்தில் இவ்வகை இதழ்களுக்கு முன்னோடி 'மணிக்கொடி' என்னும் இதழாகும். இவ்வகை இதழ் ஐரோப்பிய இதழியத்தாக்கத்தால் உருவான ஒன்றே என்பதைப் பின்கண்ட செய்தி உறுதிப்படுத்தும்.

"மணிக்கொடியை உருவாக்கியவர்களில் ஒருவரான சீனிவாசன், பிரிட்டிஷ் அரசாங்கத்தால் செய்தி திரட்டி அனுப்பும் நிருபராக இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டார். அங்கே தான் தமிழ் "மணிக்கொடி" பத்திரிக்கை அவர் மனத்தில் உருவம் பெற்றது. இலண்டனில் பல தினசரிப் பத்திரிக்கைகள் இருந்தன. ஆனால் அவையாவும் வாரத்தில் ஆறு நாட்கள் மட்டுந்தான் வெளிவரும் ஞாயிறன்று ஒரு செய்திப்பத்திரிக்கை கூடக் கிடையாது. ஆனால் ....

....

கலை, இலக்கியம் போன்ற சிறப்புப் பகுதிகளுடன் ஸண்டே அப்சர்வர் ஞாயிற்றுக்கிழமை வெளிவரும். ....

....

சீனிவாசன்மனத்திலும் தமிழிலும் அதே போன்ற ஞாயிறு சஞ்சிகையொன்றை நடத்த வேண்டுமென்ற எண்ணம் பிறந்தது. [21]

இவ்வகையில் உருவாக்கப்பட்ட இல்விதழில் ஐரோப்பிய இலக்கியங்களை அறிமுகப்படுத்தல், தழுவல், அந்த உந்துதலில்

இலக்கியம் படைத்தல் போன்ற அனைத்து நிலைகளும் ஏற்பட்டன என்று கூற முடியும். இந்தப் பின்னணியில் தொடர்ந்து பல்வேறு இதழ்கள் வெளிவந்தன. இன்றும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.[22] இவைகளில் சோவியத் நாட்டின் இலக்கியங்கள், சீன மக்கள் குடியரசின் இலக்கியங்கள் போன்றவை மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டன. இவற்றின் மூலம் டால்ஸ்டாய், மாக்சிம் கார்க்கி, புஷ்கின், ஒஸ்திரோஸ்கி போன்ற சோவியந் படைப்பாளர்களின் படைப்புகள், மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டன. இதன் விளைவால் தமிழில் பல்வேறு வகைப்பட்ட எதார்த்த இலக்கியங்கள் (Realism) உருவாவதற்கும் வழி ஏற்பட்டது. 1950களில் தோன்றிய 'எழுத்து' சிறு பத்திரிக்கையில் டி. எஸ். எலியட் போன்றோர் படைப்புகள் மொழி பெயர்க்கப் பட்டன. இவ்வகைத் தாக்கங்களும் தமிழில் உருவாக இவ்வகை இதழ்கள் உதவின.

அண்மைக் காலங்களில் வெளிவந்த, வந்து கொண்டிருக்கும் சிறு இதழ்களில் ஆல்பர்ட் காமு, சார்த்தர், ப்ராயிடு போன்ற வர்கள் குறித்த செய்திகளும், அவர்களது படைப்புகளின் மொழி பெயர்ப்புக்களும் வெளியிடப்படுவதைக் காண முடிகின்றது. அந்நியமாதல் (Alienation) இருத்தலியல் (existentialism), வாழ்வியல் எதார்த்தம், (Surrealism) போன்ற பல்வேறு ஐரோப்பியப் போக்குகளை இவ்வகை இதழ்களே[23] அறிமுகப்படுத்தும் பணியைச் செய்கின்றன. தமிழிலும் இப் பின்னணியில் இலக்கியங்கள் உருவாகும் வாய்ப்பை இவ்வகை இதழ்களே செய்கின்றன என்று கூற முடியும்.

இவ்வகையில் இதழியத்தில் மேலைத்தாக்கங்கள் குறித்து அறிவதற்கான நேரடித் தரவுகள் பெறுதல் சிக்கலான ஒன்றாக இருந்தாலும் இதுவரை தமிழ் இதழியத்தில் ஏற்பட்ட மேலைத் தாக்கங்கள் பற்றிய செய்திகளின் அடிப்படையில் பின்கண்ட தெளிவுகளை நாம்பெற இயலும்.

தமிழ் இதழியத்தின் முதல் சகாப்தத்தில் (1831–1930) ஆங்கில, இதழியத்தை அப்படியே பின்பற்றிய போக்கினைக் காண முடிகின்றது. வடிவம், உள்ளடக்கம் ஆகியவற்றிற்கு ஐரோப்பிய இதழியமே மூலமாகவும், வழிகாட்டியாகவும் அமைந்தது என்றும் கூற முடியும்.

இரண்டாம் சகாப்தத்தில் (1931 — 1980) தமிழ்ச் சமூக அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் அடிப்படையில் இதழியம்

என்பது தன்மயமாதல் (Nativization) என்னும் நிலையை முழுதும்பெறாவிடினும்,அதற்கான கூறுகளைப் பெறத்தொடங்கியது; இதன் மூலம் புதிய படைப்பிலக்கிய வகைகளையும் தமிழில் உருவாக்கிற்று எனலாம். எனவே, தமிழ் இதழியத்தில் ஐரோப்பியத்தாக்கம் என்பது மிக ஆழமாகவும், இரண்டறக் கலந்த தன்மை பெற்றதாகவும் உள்ளது என்பதைத் தெளிவாகக் காணமுடிகின்றது.

சான்றாதாரங்கள்

1. J. Natarajan, History of Indian Journalism, p. 5. (1955)
2. Xavier. Taninayagam The First Book Printed in Tamil. 'Tamil culture' 1951 Vol.
3. சுதேசமித்திரனுக்கு முன் 1802இல் இலங்கையில் வெளியிடப்பட்ட Ceylon Gazette என்ற இதழையும் இங்குக் குறிப்பிடலாம். இவ்விதழில் ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் செய்திகள் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன.
4. 1907 — இந்தியா (பாரதியார் தொடர்பு கொண்ட இதழ்).
   1917 — தேசபக்தன் (திரு. வி. க. ஆசிரியர்)
   1920 — நவசக்தி (,,)
   1922 — சுயராஜ்யா 1922 — தமிழ்நாடு
   1930 — சுதந்திரச்சங்கு போன்ற தமிழகச் செய்தி இதழ்களும்
   1841 — உதயதாரகை
   1848 — இலங்கைநேசன் போன்ற இலங்கை இதழ்களும் குறிப்பிடத்தக்க செய்தி இதழ்கள் (News magazine) ஆகும்.
5. 1833—விருத்தாந்தி
   1835—மெட்ராஸ் Chronicle (இரு மொழிகள்)
   1855—ராஜவர்த்தினி
   1856—தினவர்த்தமானி (முதல் வார இதழ்)
   1870—ஜனவிநோதினி (முதல் மாத இதழ்)
   1887—விநோதரசமஞ்சரி 1891 விவேக சிந்தாமணி
   1902 செந்தமிழ் (இரா. இராகவையங்கார்—ஆசிரியர்)
   1902 — ஞானசாகரம் (மறைமலையடிகள் ஆசிரியர்)
   1915 — ஆனந்தபோதினி (ஆரணி. குப்புசாமி முதலியார்— ஆசிரியர்)
   1923 — செந்தமிழ்ச்செல்வி
   1925 — தமிழ்ப்பொழில் போன்ற பல இதழ்களைக் கூற முடியும்.
6. வி. நா. மருதாசலம் இந்தியப் பத்திரிக்கைத் தொழிலியல் ;

7. இளசை. மணியன் (தொடு) பாரதி தரிசனம் பகுதி-2, ப. 28, (1975)
8. மா. ரா. இளங்கோவன் முற்காலத் தமிழ் இதழ்கள், ப. 20, (1979)
9. சோம. லெ. தமிழ்இதழ்கள், ப. 13, (1975)
10. Somalay. European Impact on Tamilmodern Tamil writing and Literature. P. 73, (1976)
11 M. R. Perumal Mudaliar. Madras Symposium. (1968.)
12. ஏ. கே. செட்டியார். புண்ணியவான் காந்தி. முன்னுரை ப. XIV
13. மா. ரா. இளங்கோவன். முற்காலத்தமிழ் இதழ்கள், ப. 58, (1979)
14. 1894 — விவேக சிந்தாமணி –'இரண்டு சகோதரர்கள் (என் சீதாராம நாயுடு)
1898 — விவேக சிந்தாமணி — 'கற்பின் விஜயம்' (சி. ஏ. சுப்பிரமணிய அய்யர்)
1903 — ஞானபோதினி பாரி துணை(சீனிவாசஅய்யங்கார்)
1903 — சக்கரவர்த்தினி — தாராபாய் (மாணிக்கசாமி முதலியார்)
போன்ற பலவற்றைக் குறிப்பிடமுடியும்.
தகவல் : தமிழ்நாவல் நூறாண்டு வரலாறும் வளர்ச்சியும் பிற்சேர்க்கை 2
15. மா ரா.இளங்சோவன், முற்கால தமிழ் இதழ்கள்,ப. 89.
16. Press Trust of India, United News of India, News Bureau Free Press of India போன்றவைகள்.
17. மாலைமுரசு, தினமலர், மாலைமலர், தினகரன், போன்ற பல.
18. சோமலெ, தமிழ் இதழ்கள், ப. 40. (1975)
19. Ibid, ப. 41.
20. 'செந்தமிழ்', 'செந்தமிழ்ச்செல்வி', தமிழ்ப்பொழில் போன்றவை.
21. பி எஸ், ராமையா, மணிக்கொடி காலம், ப. ௨2, (1980.)
22. 1935—புது உலகம் 1939—சுதாவின்
1943—கிராம ஊழியன் 1946—ஜனயுகம்
1947—ஜனநாயகம் 1949 சக்தி
1954—மனிதன் 1954 காந்தி
1954—சரஸ்வதி 1958—தாமரை
1959—எழுத்து 1964 புதிய தலைமுறை
1965 - தீபம் 1965 கணையாழி
1969 —ஆராய்ச்சி போன்ற பலவற்றைக் குறிப்பிட முடியும்.
23. படிகள், பரிமாணம், யாத்ரா, இலக்கிய வெளிவட்டம், நிகழ், போன்றவற்றை இவ்வகையில் குறிப்பிடலாம்,

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-613 001.

தமிழ்நாடு, இந்தியா

தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்

1.	Tamil Literature —Prof. M. S. Purnalingam Pillai	உரூ. 85/— U.S.$ 17
2.	மொழி நூல் —மாகறல் கார்த்திகேய முதலியார்	உரூ. 75—
3.	Tamil University Machine Translation System (TUMTS) Co-authors : K. C. Chellamuthu K. Rangan K. Murugesan	Rs. 75/— U.S.$ 15
4.	A Study on the Thanjavur Art Plate —Prof. P. Saravanavel	Rs. 60/— U,S $ 12
5.	நாமதீப நிகண்டு —கல்லிடைநகர் சிவசுப்பிரமணியக் கவிராயர்	உரூ 68 -
6.	மொழி நூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும் —பேரா. கா. சுப்ரமணியப் பிள்ளை	உரூ. 45/—
7.	Indians in South Africa —Prof. K. Nambi Arooran	Rs. 60'— U.S.$ 12

விற்பனைக் கழிவு: அஞ்சல் வழி 25%
நேரில் 30%
அஞ்சல் செலவு தனி
பேராசிரியர் ஆய்வாளர்களுக்கு 40%
விற்பனையாளர்களுக்குப் பெறும்படிகளுக்கு ஏற்ப கழிவு உண்டு.

தொடர்பு கொள்க:- பதிப்புத்துறை இயக்குநர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 001.

கரந்தைத் தமிழ்ச் சங்கவெளியீடுகள்

யாழ் நூல் — விபுலானந்த அடிகள்	ரூ	50	00
கட்டுரைப் பொழில் (சங்க மணிவிழா மலர்)	ரூ.	30	00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ.	60	00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டு விழா நினைவுச் சிறப்பிதழ்	ரூ.	6	00
கபிலர் – நாவலர் ந மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ	4	00
நக்கீரர் - நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	3	00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு – பா. வே. மாணிக்க நாயக்கர்	ரூ.	2	00
கவியரசு நினைவு மலர்	ரூ.	1	00
தமிழரசி குறவஞ்சி	ரூ.	0	62
சிவமும் செந்தமிழும்–பாவலர் ச. பாலசுந்தரம்	ரூ	0	25

பிற வெளியீடுகள் :

கரந்தைக் கோவை (அகப்பொருட் கோவை நூல்) பேராசிரியர் ச. பாலசுந்தரம்		7	50
கலைக்கூத்தன் கவிதைகள்	ரூ.	6	00

நூல்கட்குக் கழிவு 20% தரப்பெறும். அஞ்சற் செலவு தனி. நூல்கள் வேண்டுவோர் கீழ்வரும் முகவரிக்கு எழுதுக.

தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613 002.

பதிப்பாசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்-2.

பேராசிரியர். க. வெள்ளைவாரணன்,
142, கனகசபை நகர், சிதம்பரம்.

சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., பி. டி., பி. எல்.,
இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை.

டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பிஎச். டி.,
தலைவர், தமிழ்த்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்.

டாக்டர். சி. பாலசுப்பிரமணியன்,
எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.,
தலைவர், தமிழ் மொழித் துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர். பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பேராசிரியர் சி. கோவிந்தராசன்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

புலவர் ஆ. பாலன், எம். ஏ.,
துணை முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

புலவர். மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர்,
உமா மகேசுவரா மேனிலைப் பள்ளி, தஞ்சாவூர்-2.

திரு. பா. மதிவாணன், எம். ஏ., எம். பில்.,
துணைப்பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பதிப்பாசிரியர் :
பேராசிரியர் ச. பாலசுந்தரம்

Regd. No. TN/TJ/17.

நூல்-அஞ்சல்

பெறுநர்

திருமிகு ....

11. The Curator,
Govt. Oriental Manuscripts Library,
M a d r a s. 600 005

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு	வெளிநாடு
தனியிதழ்	ரூ.	2 00	3 00
ஆண்டுக் கட்டணம்	ரூ.	20 00	60 00
வாழ்நாள் கட்டணம்	ரூ.	250 00	600 00

வெளியிடுபவர் : கரந்தை தமிழ்ச் சங்கம்

அச்சிடுபவர் : ஜெமினி அச்சகம்